தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 24.10.2013

**மருத்துவக் குணம் கொண்ட மாதுளை சாகுபடி!**



அறுசுவைகளில் துவர்ப்பு, இனிப்பு ஆகியவற்றை இரண்டறப் பெற்றுள்ள மருத்துவக் குணம் கொண்ட மாதுளை பயிர் சாகுபடி செய்து பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சேரன்மகாதேவி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அறுசுவைகளில் அரிதான துவர்ப்புச் சுவையும், இனிப்புச் சுவையும் கலந்து உடல் நலனுக்கு உறுதுணையாக இருக்கும் மாதுளை, புனிகா கிரேனேடம் என்ற தாவரவியல் பெயர் கொண்ட மாதுளை மருத்துவப்பயன்களைக் கொண்டது.

மருத்துவப் பயன்: நோய் எதிர்ப்பு சக்தி தரும் ஆண்டி ஆக்சிடென்ட்களை அதிகளவில் கொண்டுள்ளது. புனிகலாஜின்ஸ் என்ற மாதுளையில் மட்டுமே காணப்படும் கூட்டுப் பொருள் இதயத்திற்கும், ரத்த நாளங்களுக்கும் இதமளிப்பதாக உள்ளது. கொழுப்பு, ரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.

ரத்தக்குழாய் அடைப்பின் அளவைக் குறைக்கிறது. புற்று நோய் வருவதைத் தடுக்கும் ஆற்றல் கொண்டது. இதில் உள்ள பைட்டோகெமிக்கல் கூட்டுப்பொருள் செரோட்டினின், ஈஸ்ட்ரோஜென் ஆகியன ஹார்மோன் சுரப்புகளை தூண்டுவதால் மன அமைதிக்கும், எலும்பு பலத்துக்கும் உகந்தது.

அதிகளவில் வைட்டமின் - சி மற்றும், ஓரளவு வைட்டமின் -பி 5, ஏ, ஈ ஆகிய இதர வைட்டமின்களையும் கொண்டுள்ளது. கால்சியம், பொட்டாசியம், இரும்பு ஆகிய தாதுக்களை குறிப்பிடத்தக்க அளவில் கொண்டுள்ளது. வயிற்றுக் கடுப்பு, குடல் புண்ணுக்கும் நல்ல மருந்தாகும். மலச்சிக்கலை நீக்கும்.

சாகுபடி குறிப்பு: கணேஷ், ரூபி, ஜோதி, அர்க்தா, ருத்ரா, மிருதுளா, பக்வா போன்ற ரகங்களை பயிரிடலாம். கார அமிலத் தன்மையும், வறட்சியையும் தாங்கி வளரக் கூடியது மாதுளை. கடல் மட்டத்தில் இருந்து 1800 மீட்டர் உயரம் வரை வளரும். குளிர்ச்சி மிகுந்த குளிர் காலமும், வறண்ட கோடை காலமும் தரம் மிகுந்த பழங்களை உருவாக்கத் தேவையான பருவமாகும். வேர்ச்செடிகளாகவோ அல்லது பதியன்களாகவும் நடலாம். 2 அடி நீளம், 2 அடி அகலம், 2 அடி ஆழமுள்ள குழிகளில் நடவு செய்ய வேண்டும். ஜூன் முதல் டிசம்பர் வரையான காலம் சாகுபடி பருவமாகும். வரிசைக்கு வரிசை 8 அடி, செடிக்கு செடி 8 அடி என்ற அளவில் ஒரு ஏக்கரும் 640 செடிகள் நடலாம்.

உரப்பாசனத்துடன் கூடிய சொட்டு நீர் பாசன முறையைக் கடைப்பிடிப்பது, நீர் சிக்கனம், நிறைந்த மகசூலுக்கும் ஒரு சேர வழிவகுக்கும். சொட்டுநீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை 100 சதவிகிதம் மானியம் அளிக்கிறது.

உரமிடுதல்: முதலாண்டில் செடிக்கு 10 கிலோ தொழு உரம், 450 கிராம் யூரியா, 600 கிராம் சூப்பர் பாஸ்பேட், 650 கிராம் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். 2 ம் ஆண்டு முதல் 5 ம் ஆண்டு வரை ஆண்டுக்கு செடிக்கு 20 கிலோ தொழு உரம், 900 கிராம் யூரியா, 1500 கிராம் சூப்பர் பாஸ்பேட், 1300 கிராம் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். 6 வது ஆண்டு முதல் செடிக்கு 30 கிலோ தொழு உரம்,

1350 கிராம் யூரியா, 3 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2 கிலோ பொட்டாஷ் உரங்களை இட வேண்டும்.

இந்த சாகுபடியில் பழந்துளைப்பானைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றலாம். அதாவது புல்லிவட்ட இதழ்களை நீக்குவது பழந்துளைப்பான் முட்டை வைப்பதைத் தடுக்கும். பூக்கும் தருணத்தில் 5 செ.மீ. விட்டமுடைய மாதுளம்பிஞ்சுகளைச் சுற்றி வேப்பெண்ணெய் நனைத்த துணிப் பைகளால் மூட வேண்டும்.

மூன்று சதவிகித வேப்பெண்ணெய் அல்லது 5 சதவிகித வேப்பங்கொட்டைச் சாற்றைத் தெளிக்கலாம். பிஞ்சு பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு ஒரு லட்சம் டிரைகோடெர்மா கலானிஸ் ஒட்டுண்ணியை விடலாம். செதில் பூச்சியைக் கட்டுப்படுத்த குயினோல்பாஸ் 25 ஈசி யை ஒரு லிட்டர் நீரில் இரண்டரை மில்லி கலந்து தெளிக்கலாம்.

முறையான சாகுபடி முறையை மேற் கொண்டால், ஆண்டுக்கு 8 முதல் 10 டன் மகசூல் கிடைக்கும். ஆகவே விவசாயிகள் மாதுளை சாகுபடியில் உயரிய தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து உயர் மகசூல் பெறுவதுடன் உன்னத லாபமும் பெறலாம் என்றார் அவர்.

**ரோஜாவில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்படுத்துவது எப்படி?**



மலர்களின் அரசி என அழைக்கப்படும் ரோஜா வீட்டுத் தோட்டங்களிலும், பசுமைக்குடில்களிலும் மட்டுமல்லாது கொய் மலராகவும் பணப் பயிராகவும் பயிரிடப்பட்டு வருகிறது.

இத்தகைய ரோஜாவில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்குதலால் மகசூல் இழப்பைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமானது.

ரோஜாவை பல்வேறு வகையான பூச்சிகள் தாக்கினாலும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான அசுவிணி மற்றும் இலைப்பேன் ஆகியவை மட்டுமே மகசூலை குறைப்பதில் முக்கிய காரணியாக உள்ளன.

இலைப் பேன்: இளம் மற்றும் வளர்ச்சியடைந்த இலைப்பேன்கள், இலைகள் மற்றும் பூ மொட்டுகளில் அடியில் இருந்து கொண்டு இலைகளைச் சுரண்டி பின்னர் சாற்றை உறிஞ்சுகின்றன. பாதிக்கப்பட்ட இலைகளின் மேல்பரப்பில் வெண்ணிற கோடுகள் காணப்படும். மேலும், அதிகமான தாக்குதலுக்கு உள்ளான இலைகள் வளர்ச்சி குன்றி காணப்படும். இலைப் பேன்கள் தாக்குதலுக்கான பூவிதழ்களின் ஓரம் காய்ந்தது போன்ற தோற்றமளிக்கும். இப் பூச்சியின் தாக்குதல் அதிகமாகும்போது பூவிதழ்கள் உதிர்ந்து விடும். இளம் பூச்சியானது சிவப்பு நிறத்திலும், வளர்ச்சியடைந்த பூச்சிகள் கருப்பு கலந்த பழுப்பு நிறத்திலும் காணப்படும்.

அசுவிணி : இளம் மற்றும் வளர்ச்சியடைந்த பூச்சிகள் இளந்தளிர் மற்றும் பூ மொட்டுகளில் கூட்டமாக இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சும். இதனால் பாதிக்கப்பட்ட இளந்தளிர் மற்றும் இலைகள் சுருண்டும், சிறுத்தும் காணப்படும். பூ மொட்டுகளின் வளர்ச்சி குறைந்து காணப்படும். மேலும், தாக்கப்பட்ட பூக்களின் இதழ்கள் வெளிறிய நிறத்தில் காணப்படும். அதிகமான தாக்குதலுக்கு உள்ளான மொட்டுகள் விரிவடையாமலேயே உதிர்ந்து விடுகின்றன. இளம் பூச்சிகள் வெளிறிய பச்சை நிறத்திலும், வளர்ந்த பூச்சிகள் கருப்பு கலந்த பச்சை நிறத்திலும் காணப்படும்.

சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட இளந்தளிர்கள், இலைகள் மற்றும் பூ மொட்டுகளை வெட்டி அழித்துவிட வேண்டும். தாவர பூச்சிக் கொல்லியான வேப்பெண்ணெய் 3 சதவீத கரைசலைத் தெளித்து இலைப்பேன், அசுவிணியைக் கட்டுப்படுத்தலாம். இல்லையெனில் டைமீத்தோயேட் 30 இசி 2.5 மி.லி அல்லது மீதைல் மெட்டான் 2 மி.லி. மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாகும்போது இமிடோகுளோபிரிட் 0.3 மி.லி. என்ற அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் கு. இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

**மக்காச்சோள சாகுபடியில் அதிக லாபம் பெறும் வழிகள்**



விவசாயிகள் மக்காச்சோள சாகுபடியில் அதிக லாபம் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து தூத்துக்குடி வேளாண்மைத் துறை சார்பில் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து வேளாண்மைத் துறை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஒரு ஹெக்டருக்கு 12.5 டன் தொழுஉரத்துடன் அப்ஸாஸ்பைரில்லம் 10 பாக்கெட் கலந்து பரப்பி நன்கு உழவு செய்யவும். ஹெக்டருக்கு 20 கிலோ விதை என்ற அளவில் நல்ல தரமான பூஞ்சாண விதை நேர்த்தி (டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் கிலோ விதை வீதம்) செய்யப்பட்ட விதைகளை செடிக்கு செடி 20 செ.மீ., பாருக்கு பார் 45 செ.மீ. என்ற அளவில் விதைக்கவும்.

அதிக மகசூல் பெற ஒரு ஹெக்டேருக்கு 1,11,100 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்கவும். அடியுரமாக யூரியா 65 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 188 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 50 கிலோ விட வேண்டும். அடியுரமாக கால் பகுதி யூரியா முழு அளவு சூப்பர் பாஸ்பேட் மற்றும் மூரியேட் ஆப் பொட்டாஷ் விதைப்பதற்கு முன் இடவும்.

கரிசல் மண்ணில் துவரையை ஊடுபயிராகவும், செம்மண்ணில் உளுந்து அல்லது தட்டைப்பயறை ஊடுபயிராகவும் பயிரிடலாம். விதைத்த 3- வது நாளில் அட்ரசின் களைக் கொள்ளியை ஹெக்டேருக்கு 500 கிராம் அளவில் தெளிக்கவும் பயறு வகைப் பயிர்கள் ஊடுபயிராக செய்திருந்தால் ஹெக்டேருக்கு அலக்குளோர் 4லி (அ) பெண்டிமெத்திலின் 3.3 லி தெளிக்கவும். பின் 40, 45 வது நாளில் கைக்களை ஒன்று எடுக்கவும்.

கதிரின் மேல் தோல் பழுத்து முதிர்ந்து காய்ந்தவுடன் அறுவடை செய்யவும். கோணி ஊசியைக் கொண்டு கதிரின் மேல் தோலைக் கிழித்து கதிர்களை பிரித்து எடுக்கவும். கதிர்களை சூரிய வெளிச்சத்தில் நன்கு காய வைத்து விசைக் கதிரடிப்பான் கொண்டோ அல்லது டிராக்டரை கதிர்களின் மேலே ஓட்டியோ மணிகளைப் பிரித்தெடுக்கலாம்.

மணிகளைத் தூற்றி சுத்தப்படுத்தி கோணிப்பையில் சேமிக்கவும். ஒரு ஹெக்டருக்கு 6.25 டன் முதல் 7.5 டன் வரை மகசூல் பெறலாம். மக்காச்சோளத் தட்டை பச்சையாக இருக்கும் போது மாட்டுக்கு நல்ல தீவனமாகும். பச்சைத் தட்டையை துண்டு துண்டாக நறுக்கி மாட்டுக்குத் தீவனமாக பயன்படுத்தலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண் பல்கலை.யில் 29.4 மி.மீ. மழை**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகப் பகுதியில் புதன்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 29.4 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): பீளமேடு விமான நிலையம் 1.4, பொள்ளாச்சி 5, வால்பாறை 8, கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் 16.3, ஆழியாறு 4.4, அப்பர் நீராறு 2, லோயர் நீராறு 3, மாக்கினாம்பட்டி 2.4, மணக்கடவு 13.4, சர்க்கார்பதி 3.

**சரிந்தது அமராவதி அணையின் நீர்மட்டம்!**

உடுமலை அமராவதி அணைக்கு நீர்வரத்து குறைந்ததால், 90 அடி உயரமுள்ள அணையின் நீர்மட்டம் 44 அடியாக சரிந்தது.

அமராவதி அணையின் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய, புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் பயன் பெறுகின்றன. நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு இந்த அணை குடிநீர் ஆதாரமாகவும் விளங்கி வருகிறது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில மாதங்களாக நல்ல மழை பெய்ததால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து நல்ல நிலையில் இருந்தது. இதைத் தொடர்ந்து கரையோர கிராமங்களின் குடிநீர் தேவைகளுக்காகவும், பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதி நிலங்களுக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

கடந்த 2 மாதங்களாக பாசன நிலங்களுக்கு தண்ணீர் சென்று கொண்டிருந்த நிலையில், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வந்தது. இதைத் தொடர்ந்து, பாசன நிலங்களுக்கு சென்று கொண்டிருந்த தண்ணீர் நிறுத்தப்பட்டது. இந் நிலையில், புதன்கிழமை காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 44 அடியாக இருந்தது. பழைய, புதிய பாசன பகுதிகளுக்கு இன்னும் 50 நாள்களுக்கு மேல் தண்ணீர் தேவை என்கிற நிலையில், அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

இதனால் வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து அமராவதி விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

இதுகுறித்து பொதுப் பணித் துறையினர் புதன்கிழமை கூறியது:

அணையின் நீர்மட்டம் 50 அடிக்கும் கீழே சென்றதால், புதிய, பழைய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு சென்று கொண்டிருந்த தண்ணீர் கடந்த வாரம் நிறுத்தப்பட்டது. இந் நிலையில், கடந்த சில நாள்களாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த 2 நாள்களில் மட்டும் அணையின் நீர் மட்டம் 3 அடி வரை உயர்ந்துள் ளது. மேலும் உயரும் என நம்புகிறோம். இன்னும் ஓரிரு நாளில் பாசனப் பகு திகளுக்கு மீண்டும் தண்ணீர் திறந்து விடப்படும் என்றனர்.

அணையின் நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி நீர் மட்டம் 44.74 அடியாக இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 214 கன அடி வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து கல்லாபுரம்

வாய்க்காலில் 10 கன அடியும், ராமகுளம் வாய்க்காலில் 10 கன அடியும் சென்று கொண்டிருக்கிறது

**தாளவாடி: உருளைக்கிழங்கு அமோக விளைச்சல்**

தாளவாடி மலைப்பகுதியில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

ஈரோடு மாவட்டம் தாளவாடி மலைப்பகுதி திம்பம், ஆசனூர், கேர்மாளம், திகினாரை, ஜீரகள்ளி, சூசைபுரம், நெய்தாளபுரம், தலமலை, தொட்டபுரம், காளிதிம்பம், இட்டரை, தடசலட்டி மற்றும் கர்நாடக மாநில எல்லைப்பகுதியான புளிஞ்சூர், நொக்கனஹள்ளி, உடையார்பாளையம் உள்ளிட்ட மலைக்கிராமங்களில் உருளைக்கிழங்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

120 நாள் பயிரான உருளைக்கிழங்கு அறுவடை செய்யும் பணியில், விவசாயத் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அறுவடைக்கு பின் அவற்றை சுத்தம் செய்து சாக்குப்பைகளில் நிரப்பி, அதனை 45 கிலோ மூட்டைகளாக மாற்றுகின்றனர். இங்கு விளையும் உருளைக்கிழங்கு, மேட்டுப்பாளையம் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு ஏலம் விடப்படுகிறது. தாளவாடி மலைப்பகுதியில் வளமான நிலங்கள் உள்ளதால் இங்கு விளையும் உருளைக்கிழங்குகளை வாங்க வெளிமாநிலங்களில் போட்டி உள்ளது. கடந்த மாதம் 45 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ.600 முதல் 700 வரை விற்பனையானது. புதன்கிழமை நிலவரப்படி மூட்டை ஒன்றுக்கு ரூ.800 முதல் 900 வரை விற்கப்படுகிறது. உருளைக்கிழங்கு விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் அறுவடைப் பணியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**தருமபுரி மாவட்டத்தில் சாமந்தி விளைச்சல் உயர்வு**

தருமபுரி மாவட்டத்தில் சாமந்திப் பூக்களின் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் பஞ்சப்பள்ளி, மாரண்டஹள்ளி, பாலக்கோடு, வெள்ளிச்சந்தை உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சாமந்தி மலர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந்த மலர்களை சுவாமி அலங்காரம், பூஜை மற்றும் வழிபாடுகளுக்கும், திருமணம் உள்ளிட்ட விஷேச நிகழ்ச்சிகளுக்கும் அதிகளவில் பயன்படுத்தப்படுவதால் ஆண்டு முழுவதும் சந்தையில் இந்த மலர்களுக்கு சந்தை வாய்ப்பு உள்ளது.

பஞ்சப்பள்ளி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மண் வளம் மலர் சாகுபடிக்கு ஏற்புடையதாக உள்ளதால் இங்கு அதிகளவில் சாமந்திப் பூக்களை சாகுபடி செய்யும் தொழிலில் நூற்றுக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன.

இங்கு விளையும் சாமந்திப் பூக்கள் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் மட்டுமன்றி சென்னை, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும், பெங்களூருவுக்கும் நாள்தோறும் வேன்கள் மூலம் மூட்டை, மூட்டைகளாக அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும், பெங்களூரில் இருந்து வரும் வியாபாரிகள் இங்குள்ள தோட்டங்களுக்கு நேரடியாகவும் சென்று சாமந்திப் பூக்களை கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டுகளில் பருவ மழை பொய்த்துப் போனதால் சாமந்திப் பூக்கள் சாகுபடி எதிர்ப்பார்த்த அளவு நடைபெறவில்லை. இதனால், போதிய விலையும் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர்.

ஆனால், நிகழாண்டில் அவ்வப்போது மழை பெய்து வந்ததால் மலர்கள் உற்பத்தி அதிகரித்தது. இதனால், ஓரளவுக்கு விலையும் கிடைத்தது. குறிப்பாக கடந்த ஆண்டுகளில் சாமந்திப் பூக்கள் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனையானது. நிகழாண்டில் தற்போது சாதாரண நாள்களில் கிலோ ரூ.30 முதல் ரூ.35 வரை விற்கப்படுகிறது. இதில் கடந்த ஆயுத பூஜை பண்டிகையையொட்டி கிலோ ரூ.200 வரை விற்பனையானது.

மேலும், அடுத்தடுத்து தீபாவளி, பொங்கல் உள்ளிட்ட பண்டிகைகள் வருவதால் கூடுதல் விலை கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்ப்பார்ப்பில் உள்ளனர்.

மழையால் விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் கூடுதல் விலை கிடைக்கும் என்பதால் சாமந்திப் பூ சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி முருகேசன் கூறியது:

சாமந்திப் பூ சாகுபடி செய்ய ஓர் ஏக்கருக்கு சுமார் ரூ.75 ஆயிரம் வரை செலவாகிறது. நிகழாண்டு ஓரளவுக்கு மழை பெய்துள்ளதால் விளைச்சல் அதிகரித்துள்ளது. அதேபோல விலையும் ஓரளவுக்கும் கிடைத்து வருகிறது. இந்தப் பூக்களுக்கு ஆண்டு முழுவதும் தேவை இருப்பதால் நல்ல வருவாய் ஈட்ட முடிகிறது என்றார் அவர்.

**கால்நடைகளுக்கு அக்டோபர் 26-இல் இலவச மருத்துவ முகாம்**

கால்நடைகளுக்கான இலவச மருத்துவச் சிகிச்சை முகாம் நாமக்கல் மாவட்டத்தில் சனிக்கிழமை (அக்.26) நடைபெற உள்ளது.

இதுகுறித்து நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டத்தில் 2011-12-ஆம் ஆண்டில் 100 பசுக்கள், 11,624 ஆடுகளும், 2012-13-ஆம் ஆண்டில் 100 பசுக்களும், 14,296 ஆடுகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து, 2011 முதல் 2013-ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ஆடுகள் 31,217 குட்டிகள் ஈன்றன.

இதன்படி, விலையில்லாத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், ஆடுகள் எடையை மேம்படுத்தவும் சனிக்கிழமை (அக்.26) இலவச மருத்துவச் சிகிச்சை முகாம் நடைபெற உள்ளது.

மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனை, மருந்தகங்களில் நடைபெறும் இந்த முகாமில் விலையில்லா கால்நடைகள் மட்டுமன்றி அனைத்து கால்நடைகளுக்கும் சிகிச்சையளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி, கிருஷ்ணகிரியில் பால் உற்பத்தியாளர்கள் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில், கிருஷ்ணகிரி பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அந்தச் சங்கத்தின் தருமபுரி மாவட்டத் தலைவர் எம்.ஆறுமுகம் தலைமை வகித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் தருமன், மாநிலத் தலைவர் கே.முகமது அலி, மாவட்ட நிர்வாகிகள் கே.என்.மல்லையன், இருதயராஜ், என்.கந்தசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஒரு லிட்டர் பசும் பாலுக்கு ரூ.25-ம், எருமைப் பாலுக்கு ரூ.35-ம் வழங்க வேண்டும்.

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் உற்பத்தி செய்யப்படும் பால் உப பொருள்களுக்கான விலையை ஒன்றியமே நிர்ணயிக்கும் அதிகாரம் வழங்க வேண்டும்.

பால் உற்பத்திச் செலவுக்கு குறைவாக இணையம் விலை நிர்ணயம் செய்வதைக் கைவிட வேண்டும்.

கால்நடைத் தீவனத்தை தரமானதாகவும், தேவையான அளவுக்கு வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டும்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கத்தை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.

### ரூ. 18.96 கோடிக்குப் பயிர் இழப்பீட்டுத் தொகை அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த சம்பா பருவத்தின்போது தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் பயிர் காப்பீடு செய்யப்பட்டதில் 19 வருவாய் சரகங்களுக்கு ரூ. 18.96 கோடி பயிர் இழப்பீட்டுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கடந்தாண்டு சம்பா பருவத்தின்போது பயிர் காப்பீடு செய்யப்பட்ட பயிர்களுக்குக் காப்பீட்டுத் தொகை எப்போது கிடைக்கும் என விவசாயிகள் கேள்வியெழுப்பினர்.

இதைத் தொடர்ந்து, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் பேசியது: தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த சம்பா பருவத்தின்போது பயிர் காப்பீட்டுக்காக 2,04,288 விவசாயிகளுக்குத் தமிழக அரசு ரூ. 9.47 கோடி பிரிமியம் செலுத்தியது. இதில் அம்மாபேட்டை, மெலட்டூர், செங்கிப்பட்டி, பெரியகோட்டை, அய்யம்பேட்டை, கபிஸ்தலம், பாபநாசம், அதிராம்பட்டினம், தம்பிக்கோட்டை, ஆவணம், பேராவூரணி, ஆண்டிக்காடு, குருவிக்கரம்பை, பெருமகளூர், பெரம்பூர், கண்டியூர், நடுக்காவிரி, திருவையாறு, சில்லத்தூர் ஆகிய 19 வருவாய் சரகங்களைச் சேர்ந்த 71,495 விவசாயிகளுக்கு ரூ. 18,96,97,825 பயிர் இழப்பீட்டுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளிடமிருந்து நிதி வந்தவுடன் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றார் பழனியப்பன்.

**திருவாரூரில் 12.2 மி.மீ. மழை**

திருவாரூரில் செவ்வாய்க்கிழமை 12.2 மில்லி மீட்டர் மழைப் பதிவானது.

திருவாரூர் மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில்:

வலங்கைமான் - 11.4, நன்னிலம் - 10.2, குடவாசல் - 9.2, மன்னார்குடி - 4, முத்துப்பேட்டை - 1.2 என்ற அளவில் மழைப் பதிவானது.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை**

குமரி மாவட்டத்தில் பரவலாக புதன்கிழமை மழை பெய்தது.

மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை வரை மழை விட்டு விட்டு பெய்தது. காலை 7 மணிக்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இந்த மழை 2 மணி நேரம் வரை நீடித்தது. புதன்கிழமை காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையில் நீர்மட்டம் 20 அடியாகவும், பெருஞ்சாணி அணையில் 59.95 அடியாகவும் தண்ணீர் உள்ளது.

பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 170 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 229 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பெருஞ்சாணி அணைக்கு 187 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 100 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பேச்சிப்பாறையில் 12.4 மி.மீ., மழையும், பெருஞ்சாணியில் 6.6 மி.மீ., மழையும் பதிவாகி உள்ளது.

களியக்காவிளை: இதேபோல் களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் புதன்கிழமை பகலில் பலத்த மழை பெய்தது. இப் பகுதியில் கடந்த சில நாள்களாக பகலில் லேசான மழை பெய்து வருகிறது. இந்நிலையில் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் பலத்த மழை கொட்டியது. தொடர்ந்து அரை மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்தது. அதன் பின்னர் பெரும்பாலான நேரங்களில் லேசான மழை பெய்தது.களியக்காவிளை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளான படந்தாலுமூடு, திருத்துவபுரம், மருதங்கோடு, குழித்துறை, மடிச்சல், அதங்கோடு, கோழிவிளை, தையாலுமூடு, குளப்புறம், மலையடி உள்ளிட்ட பகுதிகளிலும் பலத்த மழை கொட்டியது.

**நாளை வேளாண் உற்பத்திக்குழூக் கூட்டம்**

வேளாண் உற்பத்திக் குழுக் கூட்டம் அக்டோபர் 25ஆம் தேதி கடலூரில் நடைபெற உள்ளது.

ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பு:

இந்த மாதத்துக்கான வேளாண் உற்பத்திக்குழுக் கூட்டம் வரும் 25ஆம் தேதி காலை 9 மணிக்கு, கடலூரில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் ஆட்சியர் தலைமையில் நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து காலை 10.30 மணிக்கு, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த இரு கூட்டங்களிலும், அனைத்துத் துறை முதல்நிலை அலுவலர்கள், வேளாண் உற்பத்திக் குழுக் கூட்ட உறுப்பினர்கள் மற்றும் விவசாய சங்கப்

பிரதிநிதிகள் குறிப்பிட்ட நேரத்தில் கலந்துகொள்ள வேண்டும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்காச்சோளம் குவிண்டால் ரூ. 1,310-ஆக நிர்ணயம்**

கர்நாடகத்தில் மக்காச்சோளத்தின் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ. 1,310-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விளை பொருள்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிப்பது தொடர்பான கர்நாடக அமைச்சரவையின் துணைக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநில சட்டத் துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா தலைமை வகித்தார். மாநில வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ணபைரே கெப்டா, கூட்டுறவுத் துறை அமைச்சர் மகாதேவ பிரசாத், உணவுத் துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ், வேளாண் விளை பொருள் சந்தைப்படுத்தல் துறை அமைச்சர் சாமனூர் சிவசங்கரப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து அமைச்சர் ஜெயசந்திரா செய்தியாளர்களிடம் கூறியது:

கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால், மாநிலம் முழுவதும் சுமார் 40 லட்சம் குவிண்டால் மக்காச்சோளம் விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு குவிண்டால் மக்காச்சோளத்தை ரூ. 1,310-க்கு கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று அரசு நிறுவனங்கள் மூலம் இந்த கொள்முதல் பணி நடைபெறும். இதற்காக ரூ. 200 கோடி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, கொப்பளில் இதற்கான கொள்முதல் மையம் உடனடியாக செயல்படும்.

கொப்பரை தேங்காயின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், அதன் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ. 5,500-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ.191.97 கோடியில் 2.95 லட்சம் குவிண்டால் கொப்பரை தேங்காய்

கொள்முதல் செய்துள்ளோம். இதில் மாநில அரசு ரூ.29,53 கோடி ஊக்கத் தொகையாக அளித்துள்ளது.

இந்த மாதத்தின் இறுதியில் கொப்பரை விலை உயர வாய்ப்பு இருப்பதால், கொப்பரை கொள்முதல் தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

**கர்நாடக விவசாயிகளுக்கு மத்திய அரசு நிதியுதவி**

கர்நாடகத்தில் கோமாரி நோய் பாதிப்பால் கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கு, புதிதாக கால்நடைகள் வாங்க மத்திய அரசு சார்பில் நிதியுதவி அளிக்கப்படும் என்று, மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.

பெங்களூரு வேளாண் அறிவியல் மையத்தில் புதன்கிழமை நடைபெற்ற 8-ஆவது தேசிய வேளாண் அறிவியல் மையங்களின் மாநாட்டை குத்துவிளக்கேற்றித் தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

கர்நாடகத்தில் கோமாரி நோய் பாதிப்பால் ஏராளமான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இந்த நிலையில், கால்நடைகளை இழந்துள்ள விவசாயிகள், புதிதாக கால்நடைகளை வாங்குவதற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கும்.

கால்நடைகளை இழந்தோருக்கு தலா ரூ.25 ஆயிரம் இழப்பீடு தொகை வழங்க முடிவு செய்துள்ளதாகவும், அந்தத் தொகையை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் முதல்வர் சித்தராமையா கோரியிருக்கிறார்.

கால்நடைகளை வாங்குவதற்கு மட்டுமே விவசாயிகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் உதவித் தொகை வழங்க மத்திய அரசு தயாராக உள்ளது. இதற்கான கருத்துருவை அனுப்பினால், நிதி விடுவிக்கப்படும்.

கர்நாடகத்தில் பாக்கு உற்பத்தியாளர்களுக்கு கோடிக்கணக்கில் வருவாய் இழப்பு ஏற்பட்டதை அறிந்த மத்திய அரசு, அதுகுறித்து ஆய்வு செய்ய மத்தியக் குழுவை கர்நாடகத்திற்கு அனுப்பியது.

அந்தக் குழுவினர் அளித்த அறிக்கையின் அடிப்படையில், கர்நாடகத்திற்கு கூடுதலாக ரூ.175 கோடி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால்,  உலகச் சந்தையில் இந்தியாவுக்கு சிறப்புத் தகுதி கிடைத்துள்ளது. அரிசி ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கோதுமை ஏற்றுமதியிலும் இந்தியா முன்னணியில் உள்ளது என்றார் சரத் பவார்.

விழாவில் கர்நாடக ஆளுநர் எச்.ஆர்.பரத்வாஜ், முதல்வர் சித்தராமையா, மாநில வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ணபைரே கெப்டா, சட்டத் துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா, விவசாயப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நாராயண கெப்டா உள்ளிட்டோர் கலந்து  கொண்டனர்.

**வெங்காய வரத்து அதிகரிப்பு: ஷீலா தீட்சித்**

ராஜஸ்தான் போன்ற அண்டை மாநிலங்களில் இருந்து தில்லிக்கு வெங்காய வரத்து அதிகரித்துள்ளது; மதர் டைரியின் சஃபல் விற்பனை மையங்களில் வெங்காயம் கிலோ ரூ.55 முதல் 65 என்ற அளவில் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தில்லி பிரதேச முதல்வர் ஷீலா தீட்சித் புதன்கிழமை தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக மத்திய வேளாண் துறை அமைச்சர், உணவு வழங்கல் துறை அமைச்சர் ஆகியோரை வியாழக்கிழமை சந்தித்துப் பேச உள்ளதாகவும் அவர் கூறினார்.

தலைநகரில் சில மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ வெங்காயம் ரூ.10 முதல் ரூ.20 வரை விற்கப்பட்டு வந்தது. இந் நிலைமை முற்றிலும் மாறி கிலோ ரூ.100-க்கு தற்போது விற்கப்படுகிறது.. தொடர்ந்து வெங்காயம் விலை உயர்ந்து வருவதால் பொதுமக்களிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில், வெங்காயத்தின் விலையைக் கட்டுக்குள் கொண்டு வர தில்லி பிரதேச அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக முதல்வர் ஷீலா தீட்சித் குறிப்பிட்டார். இது தொடர்பாக தனது இல்லத்தில் புதன்கிழமை அவர் அளித்த பேட்டி:

தலைநகரில் வெங்காய விலை உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரசு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. தில்லியில் வெங்காயம் உற்பத்தி இல்லை என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இதனால், வெங்காயம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் இருந்து வரும் வரத்து மூலம் தில்லியின் நாளொன்று தேவையான 1,000 டன்கள் வெங்காயம்  நிவர்த்தி செய்யப்படுகிறது. தற்போது வெங்காயம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டதாலும், பதுக்கல் நடைபெறுவதாலும் விலை அதிகரித்து வருகிறது. கனமழை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டதும் வெங்காயம் விலை உயர்வுக்கு மற்றொரு காரணம்.

மேலும், தில்லியில் வெங்காயத்தை இருப்பு வைப்பதற்கான போதுமான கிடங்கு கொள்திறனும் இல்லை. எனினும், வெங்காயப் பதுக்கலைத் தடுக்கும் வகையில் மொத்த காய்கறி விற்பனை செய்யும் இடங்களில் தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெங்காய வரத்தில் ஏற்ற, இறக்கம் இருப்பதன் காரணமாக விலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. தில்லியில் மதர் டைரி ஷஃபல் மையங்களில் கிலோ ரூ 55-65 விற்கப்பட்டு வருகிறது. கடந்த சனிக்கிழமையில் இருந்து தில்லிக்கு ராஜஸ்தானில் இருந்து வெங்காய வரத்  தொடங்கியுள்ளது. இது நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால் அடுத்த 2, 3 நாள்களில் வெங்காய விலை குறையும்.

இந்த விலை உயர்வு தொடர்பாக வியாழக்கிழமை, மத்திய வேளாண் துறை அமைச்சர், உணவு, வழங்கல் துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து பேச உள்ளேன். மேலும், இந்த விவகாரத்தை இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைக் கூட்டமைப்பின் (நாஃபெட்) கவனத்திற்கும் எடுத்துச் செல்ல உள்ளேன்.

தில்லி ஆசாத்பூர் மண்டியில் வெங்காய வரத்து புதன்கிழமை 905 டன்களாக இருந்தன. அதே சமயத்தில் மொத்தக் கடைகளில் வெங்காய விலை கிலோ ரூ.35-ரூ58 என்ற நிலையில் உள்ளது. தில்லிக்கு செவ்வாய்க்கிழமை வெங்காய வரத்து 1,104 டன்களாக இருந்தது.

அக்டோபர் 20-இல் 795 டன்களாகவும், அக்டோபர் 19-இல் 526 டன்களாகவும் இருந்தன. இந்த மூன்று நாள்களிலும் மொத்தக் கடைகளில் வெங்காயம் விலை

கிலோ ரூ.37.50 - ரூ. 60 என்ற நிலையில் இருந்தது. நாடு முழுவதும் வெங்காய விலை சராசரியாக கிலோ ரூ.83 ஆக உள்ளது.

கான்பூரில் கிலோ ரூ.80, லக்னௌவில் கிலோ ரூ.75, கொல்கத்தாவில் கிலோ ரூ.65, மும்பையில் ரூ.60, குவாலியரில் ரூ.65, அகர்தலாவில் ரூ.83 என உள்ளது. வெங்காய விலையில் இயல்புநிலை திரும்புவதற்கு மொத்த விற்பனையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார் முதல்வர் ஷீலா தீட்சித்.

தில்லி பிரதேச உணவு வழங்கல் துறை அமைச்சர் ஹாரூண் யூசுஃப் கூறுகையில், "நாடு முழுவதும் வெங்காய விலை உயர்ந்துவிட்டது. இதனால், இதை அரசியலாக்கக் கூடாது' என்றார்.

வெங்காய விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருவது தில்லிவாசிகளைக் கவலையில் ஆழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.

**அறுவடைக்குத் தயாராக இருந்த 75 ஏக்கர் நெற்பயிர் பாதிப்பு**

மதுரை வடக்கு தாலுகாவுக்கு உட்பட்ட குலமங்கலம் பகுதியில் அறுவடைக்குத் தயாராக இருந்த 75 ஏக்கர் நெற்பயிர் பாதிக்கப்பட்டுள்ளது.

பெரியாறு-வைகை பாசனத் திட்டத்தின் இருபோக சாகுபடி பகுதியில் மதுரை வடக்கு தாலுகா, வாடிப்பட்டி தாலுகா பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இப்பகுதியின்

முதல்போகத்துக்கு ஜூலையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. பெரியாறு-வைகை அணைகளின் மொத்த இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடியைத் தாண்டிய பிறகு முதல் போகத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு அத்தகைய அளவைக் கடந்த பிறகும் தண்ணீர் திறப்பது தாமதம் ஆகி வந்தது.

இந்நிலையில், இருபோக சாகுபடி பகுதி விவசாயிகள் பொதுப்பணித் துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் பிறகே தண்ணீர் திறப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன் பிறகு, விவசாயப் பணிகளைத் துவக்கிய நிலையில் வடகிழக்குப் பருவமழை துவங்கிவிட்டது. இருபோக சாகுபடி பகுதிகளின் பெரும்பாலான

கிராமங்களில் நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயார் நிலையில் இருக்கின்றன. கடந்த சில நாள்களாக

பெய்து வரும் தொடர் மழை காரணமாக நெற்பயிர்கள் தண்ணீர் மூழ்கி கீழேசாய்ந்துவிட்டன. இதனால் அவற்றை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சத்திரப்பட்டி, மஞ்சம்பட்டி, வீரபாண்டி, குலமங்கலம் உள்ளிட்ட கிராமங்களின் சுற்றுவட்டார பகுதிகளில் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரியாறு- வைகை பாசனத் திட்டத்தில் முதல்போகத்துக்குத் தண்ணீர் திறக்க தாமதம் செய்யும்போதே இப் பிரச்னையை பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் தெரிவித்தோம், இருப்பினும் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை என்கிறார் குலமங்கலம் பகுதியைச் சேர்ந்த விவசாயி எம்.திருப்பதி.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

ஜூன் மாதத்தில் பெரியாறு - வைகை அணைகளின் மொத்த நீர் இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கனஅடியைத் தாண்டிய உடனே தண்ணீர் திறந்துவிட வேண்டும். தாமதம் செய்தால் அறுவடை காலத்தில் பருவமழையால் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று அப்போதே கூறினோம். ஆனால், பொதுப்பணித் துறையினர் கண்டுகொள்ளவில்லை.

ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை செலவாகியுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு பொதுப்பணித் துறையினரின் சரியான திட்டமிடல் நீர்மேலாண்மை இல்லாததே தான் காரணம். தொடர் மழையால் அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்கள் சரிந்துவிட்டன. அவற்றை அறுவடை செய்தாலும் பயனில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகளிடம் கேட்டதற்கு, பெரியாறு - வைகை பாசனத் திட்டத்தின் இருபோக பகுதியான குலமங்கலம் பகுதியில் தொடர் மழையால் நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்வையிட்டுள்ளோம். இப்பகுதியில் 89 விவசாயிகள் பயிரிட்டிருந்த ஏறத்தாழ 75 ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பியுள்ளோம் என்றனர்.

**திருந்திய நெல் சாகுபடியில் நாற்று நட ஆட்சியர் வேண்டுகோள்**

திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்று நடவு பணியினை மேற்கொண்டால் அதிக மகசூல் கிடைக்கும் என விவசாயிகளுக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிவகங்கை மற்றும் கல்லல் ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் சோழபுரத்தில் நாற்று நடும் பணியினைப் பார்வையிட்டு விவசாயிகளிடம் கூறும் போது, சிவகங்கை ஒன்றியம் சோழபுரத்தில் பருவமழை பெய்துள்ளதால் நீர்நிலைகளில் தண்ணீர் உள்ளது.

திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவுப் பணிகள் மேற்கொண்டால் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு இருக்கும் என்றார். தொடர்ந்து விவசாய இடுபொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கிறதா என அவர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் கல்லல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவு மையத்திற்கு புதிதாக கட்டப்படும் கட்டடத்தைப் பார்வையிட்ட ஆட்சியர் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

**பருவமழையைச் சமாளிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கியதை அடுத்து வருவாய்துறை, பொதுப்பணித்துறை மற்றும் சுகாதாரத்துறை சார்பில் சென்னையில் 24 மணிநேரம் செயல்படும் அவசர கால கட்டுப்பாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளது.

பருவமழையைத் சமாளிக்க மாநிலம் முழுவதும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

மழையின் அளவு, ஏரி, குளங்களுக்கு வரும் தண்ணீரின் அளவு கணக்கிடப்படுகிறது. அத்துடன் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்வது, நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது, நோய் பரவாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கைகள், காலரா, சிக்கன் குனியா, பன்றிக் காய்ச்சல் போன்றவை ஏற்பட்டால் எங்கு

சிகிச்சை பெறுவது, ரத்தம் சோதிப்பது மற்றும் உடனடியாக மருத்துவக் குழுக்களை சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அனுப்புவது போன்ற போர்க்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக சென்னை எழிலகத்தில் உள்ள வருவாய் ஆணையர் அலுவலகத்தில் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் தொடங்கப்பட்டு 24 மணி நேரம் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் எந்த பகுதியில் இருந்தும் 044 1070, என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொண்டு மக்கள் புகார் தெரிவிக்கலாம். இதற்காக 10 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள், உள்ளன. இந்த அறைகளை அந்தந்தப் பகுதி எஸ்.டி.டி. நம்பருடன் சேர்த்து 1077 என்ற கட்டணமில்லாத தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவிக்கலாம்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதார இயக்குநரக வளாகத்தில் மழைக்கால பாதிப்புக்கான, 24 மணிநேர கட்டுப்பாட்டு அறை தொடங்கப்பட்டு உள்ளது. இந்த அறையை மாநிலத்தின் எந்தப்பகுதியில் இருந்தும் 044-24350496 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு நோய்களுக்கு சிகிச்சை எங்கு பெறுவது, யாரைத் தொடர்பு கொள்வது போன்ற பல்வேறு தகவல்களைத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

அத்துடன் தொற்று நோய்கள் அதிகம் பரவி உள்ள பகுதிகளுக்கு விரைந்து மருத்துவக் குழுவினரை அனுப்பும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட உள்ளன.

பொதுப்பணித்துறையின் தலைமை முதன்மை பொறியாளர் அலுவலகம் உள்ள எழிலகத்தில் 24 மணிநேரம் செயல்படும் அவசர கால கண்காணிப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மையம் மூலம் அணைக்கட்டுகளில் தண்ணீர் இருப்பு அளவு, அணை இருக்கும் பகுதியில் பெய்த மழை அளவு மற்றும் அணைக்கு வரும் தண்ணீர் மற்றும் வெளியேறும் தண்ணீரின் அளவு ஆகியவை தினசரி கண்காணிக்கப்படுகிறது.

இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 044 28525351 மற்றும் 044 28517261 ஆகிய எண்களில் நீர் நிலைகள் குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் மட்டுமல்லாது, விவசாயிகள், பொதுமக்களும் அளிக்கும் தகவல்கள் பெறப்படுகின்றன. அதன்

மூலம் பெறப்படும் புள்ளி விவரங்களும் அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் மழையின் அளவை தெரிந்து கொள்வதுடன், தண்ணீரால் பொதுமக்கள் பாதிக்காதவாறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறன.

**தமிழகத்தில் மேலும் சில நாள்களுக்கு மழை நீடிக்கும்**

தமிழகத்தில் பெய்து வரும் மழை மேலும் சில நாள்களுக்கு தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. மேலும் வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை சற்று நகர்ந்து தெற்கு ஆந்திர கடலோர பகுதியை ஒட்டிய கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாகவும் மழை பெய்யும்.

வட தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. தென் தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் செட்டிகுளத்தில் 50 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. திருவண்ணாமலையில் 40 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

பாடலூர், தேவலா, பவானிசாகர் ஆகிய பகுதிகளில் 30 மி.மீ. மழையும், கோவை, துறையூர், கூடலூர், மயிலாடுதுறை, பாபநாசம் ஆகிய பகுதிகளில் 20 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

நாமக்கல், பொன்னேரி, திருவாரூர், ஏற்காடு, பூந்தமல்லி, வேதாரண்யம், காரைக்கால், கரூர் பரமத்தி, காஞ்சிபுரம், சென்னை, ஓசூர் ஆகிய இடங்களில் 10 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

**மழையால் வரத்து குறைவு: வெங்காயம், தக்காளி விலை உயர்வு**



கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழையால் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு வரும் காய்கறிகளின் வரத்து கடுமையாக குறைந்துள்ளது.

இதன் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் வெங்காயம், தக்காளியின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் வரை, சிறிய வெங்காயம் கிலோ ரூ.25-க்கும், பெரிய வெங்காயம் ரூ.35-க்கும் விற்கப்பட்டு வந்தது.

தற்போது வரத்துக் குறைவால் சிறிய வெங்காயம் கிலோ ரூ.60-க்கும், பெரிய வெங்காயம் ரூ.80-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அதே போல், ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி, தற்போது ரூ.35 முதல் ரூ.60 வரை விற்கப்படுகிறது.

இதனால் நடுத்தர குடும்பத்தினர், சிறிய ஹோட்டல்கள், சாலையோர டிபன் கடை நடத்துவோர் ஆகியோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சாதாரணமாக ஒரு கட்டு ரூ.20-க்கு விற்கப்பட்ட கொத்தமல்லி தற்போது ரூ.60 என விற்பனை செய்யப்படுகிறது.

இதுபோல் அனைத்து காய்கறிகளும் விலை உயர்ந்துள்ளது.

திருவள்ளூரில் புதன்கிழமை காய்கறி விலை நிலவரம் (ஒரு கிலோ): வெங்காயம் (சிறியது) - ரூ.60, (பெரியது) - ரூ.80, தக்காளி (பெங்களூர்) - 30, நாட்டுத் தக்காளி ரூ.40, கத்தரிக்காய் - ரூ.20, வெண்டைக்காய் - ரூ.20, முள்ளங்கி (வெள்ளை) - ரூ.15, சிகப்பு முள்ளங்கி - ரூ.25, கோஸ் - ரூ.30, சேனை - ரூ.20, உருளைக்கிழங்கு - ரூ.35, பீன்ஸ் - ரூ.30, அவரைக்காய் - ரூ.40, காளிஃபிளவர் (ஒன்று) - ரூ.20, பெங்களூர் கத்தரிக்காய் - ரூ.25, முருங்கைக்காய் - ரூ.40, இஞ்சி - ரூ.80, பீட்ரூட் - ரூ.20, நூக்கல் - ரூ.15, கோவக்காய் - ரூ. 25, பாகற்காய் - ரூ.40, பீர்க்கங்காய் - ரூ.40, பச்சை மிளகாய் - ரூ.60.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.10.2013**

## உரங்களை அதிக விலைக்கு விற்காதீர்கள் அதிகாரிகள் எச்சரிக்கை

தேனி உரமூடையில் குறிப்பிட்ட விலையை விட அதிக விலைக்கு : மூடைகளை விற்க கூடாதுபில் போட்ட பின்னரே மூடைகளை விற்க வேண்டும் என . உரக்கடைகளுக்கு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் (இப்கோ(, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேனி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சார்பில் தேனி மாவட்ட கூட்டுறவு உர விற்பனையாளர்கள் கருத்தரங்கு நடந்ததுடான்பெட் . டான்பெட் .மண்டல மேலாளர் மாரீஸ்வரன் வரவேற்றார் துணைத்தலைவர் முருகன் முன்னிலை வகித்தார்இணைப்பதிவாளர் வெள்ளியங்கிரி . தலைமை வகித்தார்.விவசாய இணை இயக்குனர் சுந்தரம் தலைமை வகித்தார் . தரக்கட்டுப்பாடு விவசாய உதவி இயக்குனர் ஜெயம்பாண்டியன் பேசியதாவது : தற்போது மழை சாதகமாக இருப்பதால் தமிழகத்திற்கு 120 லட்சம் டன் உரங்கள் தேவைப்படுகிறது. இதற்கேற்ப உரங்கள் கொள்முதல் செய்யப்படுகிறதுதற்போது . தேனி மாவட்டத்தில் 1655 டன் உரம் உள்ளதுஇன்னும் ஆயிரம் டன் இறக்குமதி . செய்யப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்ப உரங்கள் உள்ளதுஎனவே உரங்களை . .அதிக விலைக்கு விற்க கூடாது பதிவுகளை புதுப்பிக்காமல் யாரும் உரங்களை விற்பனை செய்யக்கூடாதுவிற்பனை . செய்யும் உரங்களுக்கு பில் வழங்க வேண்டும்.பி.ஏ.வழக்கமான தேவையில் டி ., உரங்களை 5 சதவீதம் குறைத்து பயன்படுத்த வேண்டும்இதனை ஈடு செய்யும் . வகையில் சூப்பர் பாஸ்பேட் உரங்களை பயன்படுத்த வேண்டும், என்றார். துணைப்பதிவாளர்கள், திருநாவுக்கரசு, முருகேசன், தேனி கூட்டுறவு விற்பனை சங்க மேலாண்மை இயக்குர் வெங்கடாசலம், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் சின்னச்சாமி, கள் அலுவலர் சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கல்

போடிபசுமை போர்வை" தமிழ்நாடு :' திட்டத்தில், மரங்கள் வளர்க்க இருக்கும் இடம் தேடி வனத்துறை மூலம் விவசாயிகளுக்கு, மரக்கன்றுகள் இலவசமாக வழங்கி நடவு செய்யும் பணியில் வனத்துறையினர் ஆர்வம் காட்டி வருகின்றனர். புவி வெப்பமயமாதலை தடுக்கவும், தோட்டங்களில் இலவம், தேக்கு, சவுக்கு,வேம்பு உள்ளிட்ட மரங்கள் வளர்க்க வனத்துறை ஏற்பாடு செய்துள்ளது . ஒவ்வொரு விவசாயிக்கும், குறைந்தது 200 மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன . இவர்கள்3 ஆண்டுகளில் 200 மரக்கன்றுகளை மரங்களாக வளர்த்த பின், அவர்களுக்கு 1000 ரூபாய் ஊக்கத் தொகையும், குறைந்தது 5 ஆண்டுகளுக்கு பின் அந்த மரங்களை விவசாயிகளே சொந்தமாக பயன்படுத்தி கொள்ளலாம். இதற்காக இடையூறும் ஏற்படாத வகையில், விவசாயிகளுக்கும் வனத்துறைக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்படுகிறது இந்த .ஒப்பந்தத்தின் படி வனத்துறையினர் விவசாயிகள் இருக்கும் இடம் தேடி மரக்கன்றுகளை நடவு செய்யும் பணியில் வனத்துறையினர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## அதிக மகசூலுக்கு ஏஸ் அக்ரோவின் ஜி-9 திசுவாழை கன்றுகள்

விவசாய உலகில், தற்போதைய சூழலில் தொழில்நுட்பங்களும், உற்பத்தி முறைகளும் மாறி வருகிறதுஇதில் வாழை சாகுபடியில் திசு வாழைகள் புதிய . புரட்சியை ஏற்படுத்தி உள்ளதுஇதில் ஹைதராபாத்தில் அமைந்துள்ள ஏஸ் . அக்ரோ டெக்னாலஜியின் ஜி-9 திசு வாழை கன்றுகள், விவசாயிகள் மத்தியில் பயன்படுத்தப்படுவதிலும், உற்பத்தியிலும் முதலிடம் வகிக்கிறது. ஹைதராபாத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் 20 கோடி ரூபாயில் அதிநவீன அறிவியல் உபகரணங்களுடன் டெக்-ஹை'" லேப் மற்றும் நர்சரியை கொண்டுள்ளது. திசு வாழைகளை ஆராய்ச்சி செய்ய அதிநவீன பிரம்மாண்ட ஆய்வகத்தை கொண்டுள்ளது. ஆண்டிற்கு ஒரு கோடி கன்றுகளுக்கும் மேலாக உற்பத்தி செய்யும் வசதி கொண்ட திசு கல்ச்சர் ஆய்வகத்தை கொண்டுள்ளது. இந்திய அளவில் பயோ டெக்னாலஜி துறையின் சிறப்பு சான்றிதழ் பெற்ற ஒரே நிறுவனம் இதுவாகும்மிக தரமானதாக . கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவதால்,

மற்ற கம்பெனிகளை விட அதிக மகசூலை கொடுக்கிறதுநோய்கள் எதுவும் . தொற்றாத பார◌ுமுலாவில் தயாரிக்கப்படுகிறது. நடவு முதல் அறுவடை வரையில் நேரடியாக இலவச ஆலோசனையும் தரப்படுகிறது. தமிழ்நாடு விவசாய துறைக்கு 20 லட்சம் ரூபாய் அளவுக்கு கன்றுகள் இந்த நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது . விவசாயிகளின் வாழ்வில் வளத்தையும், நலத்தையும் கருத்தில் கொண்டு உற்பத்தி செய்வது,

ஏஸ் டெக்னாலஜியின் ஜி-9 திசு வாழைகளின் தனிச்சிறப்புதேனி மாவட்டம் . உத்தமபாளையத்தில் இந்த கன்றுகளின் விற்பனையகம் அமைந்துள்ளது. தொடர்பிற்குடைடஸ் .எம்.கே :, மொபைல் :94889-63881.

## காற்கறி சாகுபடி பாதிப்பு

தேவாரம் தேவாரம் பகுதியில் தொடர் மழைய :◌ால், காய்கறி செடிகள் பாதிப்படைந்துள்ளன.
தேவாரம், கோம்பை, அய்யம்பட்டி, டிசிந்தலைச்சேரி., தம்மிநாயக்கன்பட்டி, டிபுதுக்கோட்டை., புதுார், பொட்டிப்புரம் பகுதியில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் காய்கறி சாகுபடி நடக்கிறது.
இப்பகுதியில், கடந்த ஒரு வாரமாக தொடர் மழை பெய்து வருகிறதுதொடர் . மழையால், தக்காளி, பீன்ஸ், கொத்தமல்லி போன்றவற்றில், செடிகளில் உள்ள பூக்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து விட்டன. ஏக்கருக்கு 10 ஆயிரத்திற்கு மேல் செலவு செய்து பயிரிட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

## கருவாடு விலை உயர்வு

ராமநாதபுரம் ராமநாதபுரம் :, ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான மீனவர்கள் கருவாடு உலர வைத்துள்ளனர்தொடர் . மழையால், கருவாடு விலை கிலோவிற்கு 20 ரூபாய் வீதம் உயர்ந்துள்ளது .
இரண்டு நாட்களுக்கு முன், 350க்கு விற்ற சீலா கருவாடு 370க்கும், 230க்கு விற்ற நெத்திலி (பெரியது)250க்கும், 130க்கு விற்ற சிறிய நெத்திலி 150க்கும், 160க்கு விற்ற வால கருவாடு 180க்கும், 100க்கு விற்ற கனவா 120க்கும், 100க்கு விற்ற

விலமீன் கருவாடு மற்றும் ஊழா கருவாடு 120க்கும், 80க்கு விற்ற கத்தாழை கருவாடு 100க்கும், 50க்கு விற்ற காரல் 60க்கும் விற்கப்படுகிறதுதட்டுப்பாடு . அதிகரிப்பால், கருவாடு விலை மேலும் அதிகரிக்கும்.

## நெல் பயிருக்கு போதிய உரங்கள்முளைப்பு திறனை எட்டியதால் விவசாயிகள் : ஆர்வம்

ராமநாதபுரம் ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் சாகுபடி :
தீவிரமடைந்துள்ளதையடுத்து, பெரும்பாலான விவசாயிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில், போதிய டி.பி.ஏ., மற்றும் காம்பளக்ஸ் உரம் இருப்பு வைக்க வலியுறுத்தி வருகின்றனர்.
இந்த மாவட்டத்தில் சில நாட்களாக பெய்த மழையால் ராமநாதபுரம், பரமக்குடி, திருவாடானை, முதுகுளத்தூர், ஆர்மங்கலம் உள்ளிட்ட பகுதிகள.எஸ்.ில் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளன. ஒரு லட்சத்து 30 ஆயிரம் எக்டேரில் நெல், 22 ஆயிரம் எக்டேரில் மிளகாய், 6,000 எக்டேரில் சிறு தானியங்கள், 5,100 எக்டேரில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகிறது.
நடப்பாண்டு சராசரியாக 60 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி நடக்கிறது.
தற்போது, நெல் விதைகள் முளைப்பு திறனை எட்டியுள்ளதால், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், தாலுகா அலுவலகத்தில் போதிய உரங்களை இருப்பு வைக்க விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
ஜாஹிர் உசேன், விவசாயி, தினைக்குளம் கடந்த :3 ஆண்டுகளாக இயற்கை உரம் மூலம் விவசாயம் செய்து வருகிறேன் .2 ஏக்கரில் கடலை சாகுபடி செய்துள்ளேன். கடந்தாண்டு, இயற்கை உரம் மூலம் ஒரு ஏக்கருக்கு 750 கிலோ வரை கடலை விளைந்தது.ஆண்டுக்கு இரண்டு முறை சாகுபடி செய்கிறேன் .
மண்புழு உரம், குப்பை மணல், ஆட்டு புழுக்கை இடுவதால், மண் வளத்தோடு இருக்கிறது.சாகுபடியும் நன்றாக உள்ளது .
இயற்கை உரம் மூலம் கிடைக்கும் பொருட்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் .

ரசாயன உரம் பயன்படுத்துவதால், மண் வளம் பாதிக்கப்படும்மகசூல் மட்டுமே . அதிகம் கிடைக்கும்.

வீரமணி விவசாயி, கொன்னக்குளம்திருவாடானை :, ஆர்.எஸ்., மங்கலம் ஒன்றிய பகுதிகளில் 45 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி நடக்கிறதுதற்போது ., பெய்த மழையில் முளைப்பு திறன் ஏற்பட்டுள்ளது. பயிர் வளர்ச்சிக்கு போதிய உரம் தேவைப்படுகிறதுஎனவே ., கூட்டுறவு தொடக்க வேளாண் சங்கம் மற்றும் தாலுகா விற்பனை சங்கங்களில் டிப.ஏ.ி., மற்றும் காம்பளக்ஸ் உரங்கள் போதிய அளவு இருப்பு வைக்க வேண்டும்தனியார் கடைகளில் கூடுதல் . விலைக்கு, உரம் விற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும்வேளாண் துறை அதிகாரி . ஒருவர் கூறியதாவதுவிவசாயிகளின் நலன் கருதி தனியார் மற்றும் கூட்டுறவு : சங்கங்களில் 3690 மெட்ரிக் டன் யூரியா, 1975 மெட்ரிக் டன் டி.பி.ஏ., உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தவிர, 173 மெட்ரிக் டன் பொட்டாஷ் இருப்பு உள்ளதுவிவசாயிகளின் தேவைக்கு . ஏற்ப, மாதந்தோறும் 800 மெட்ரிக் டன் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தடையின்றி உரங்கள் கிடைக்க, மாவட்ட நிர்வாகம் முனைப்பு காட்டி வருகிறது, என்றார்.

## பனை விதை நடும் விழா

மண்டபம் புதுமடம் கடலோரப் பகுதியில் :, பனை விதை நடும் விழா நடந்தது . .இர்வோ இயக்குனர் சந்திரன் தலைமை வகித்தார்

ஊராட்சித் தலைவர் தர்வேஸ் முன்னிலை வகித்தார்.எஸ்.டி.டபுள்யு.ஆர் ., செயலாளர் சாத்தையா வரவேற்றார்.

உச்சிப்புளி விவசாய உதவி இயக்குனர் சுப்புராஜ், உதவி அலுவலர்கள் சீராளன், குமார் ஆகியோர் பனை விதைகள் நட்டனர்கோரவள்ளி பனைத் தொழிலாளர் . சங்கத் தலைவர் மாணிக்கம் உட்பட பலர் பங்கேற்றனர்.நிர்மலா நன்றி கூறினார் .

### ஆடுகளுக்கு இரையாகும் பருத்தி செடி

திருப்புவனம் திருப்புவனம் அருகே பிரமனூர் பகுதியில் வறட்சி காரணமாக : காய்ந்த பருத்தி செடிகள் ஆடுகளுக்கு இரையாகி வருகிறதுசமீபத்திய மழைக்கு . மீண்டும் வளர்ந்த செடிகள் தீவனமாக மாறியுள்ளது.

திருப்புவனம் அருகே பிரமனூர், அச்சங்குளம், சங்கங்குளம், புளியங்குளம், அழகுடையான் பகுதியில் பருத்தி, காய்கறி பயிரிடப்பட்டுள்ளதுசில மாதத்திற்கு . முன்பு பெய்த மழைக்கு வளர்ந்த பருத்தி செடிகள், தொடர் வறட்சி காரணமாக பலன் கொடுக்கும் பருவத்தில் காய்ந்து விட்டதுஇதில் ஏமாற்றம் அடைந்த . விவசாயிகள், பல ஆயிரங்கள் செலவழித்தும் பலனின்றி பரிதவித்தனர். எதற்கும் பயன்படாமல் வீணாகும் செடிகள், ஆடுகளுக்காவது இரையாகட்டும் என எண்ணி மேய்ச்சல் நிலமாக மாற்றிவிட்டனர். சில நாட்களாக தொடர் மழைக்கு ஓரளவு தழைத்த செடிகள் தீவனமாக மாறியுள்ளதுஇதனால் ., கடும் வறட்சியால் மேய்ச்சலுக்கு வழியின்றி தவித்த ஆடுகளுக்கு, பருத்தி செடிகள் நல்ல தீவனமாகியுள்ளது.

### உழவர் மன்றக்கூட்டமைப்பிற்கு நபார்டு வங்கி நிதி உதவி

விளாத்திகுளம்விளாத்திகுளத்தில்: உழவர் மன்றங்களின் ஆய்வுக் கூட்டத்தில் விளாத்திகுளம் வட்டார உழவர் மன்றங்களின் கூட்டமைப்பிற்கு நபார்டு வங்கி ரூ.6.30 லட்சம் நிதி உதவிக்கு அனுமதி அளித்துள்ளதுவிளாத்திகுளத்தில் . உழவர் மன்றங்களின் ஆய்வுக் கூட்டத்திற்கு இப்பகுதியைச் சேர்ந்த 11 உழவர் மன்றங்களில் இருந்து 43 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் கடந்த .3 ஆண்டுகளாக 11 கிராமங்களில் செயல்பட்டு வரும் உழவர் மன்றங்களின் தலைவர்கள் தங்களது கிராம மக்களுக்கு செய்த பல்வேறு சேவைகளை எடுத்துரைத்தார்கள்மேலும் கிராம மக்களுக்கு . தேவைப்படும் உதவிகளை அரசு மற்றும் வங்கிகளிடமிருந்து பெறுவதில் ஏற்படும் சிரமங்களை நபார்டு வங்கி மேலாளரிடம் முறையிட்டனர்நபார்டு வங்கி . மேலாளர் மாவட்ட அளவிலான உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு இப்பிரச்சனைகளை கொண்டு சென்று தீர்வு காண உறுதி அளித்தார்அதை . தொடர்ந்து நபார்டு வங்கி மேலாளர் விளாத்திகுளம் வட்டார உழவர்

மன்றக்கூட்டமைப்பிற்கு ரூ.6.30 லட்சம் நிதி உதவி தர நபார்டு வங்கி அனுமதி அளித்துள்ளதை தெரிவித்தார்இந்த நிதியை . விவசாய செலவுகளான விதை, உரம், பூச்சி மருந்துகள் வாங்குவதற்கு கடனாக வழங்குமாறு அறிவுறுத்தினார் . கூட்டமைப்பின் வழிகாட்டி நிறுவனமான விடியல் டிரஸ்ட், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை மற்றும் வங்கிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பு பாலமாக இருந்து விவசாயிகளின் வளர்ச்சிக்கு உதவி செய்வதின் முக்கியத்துவம் பற்றியும் கூறினார்ஏற்பாடுகளை . விடியல் டிரஸ்ட் இயக்குனர் ஜோதிமணி மற்றும் அலுவலர்கள் குமாரவேல் மரிய ஜெயராணி செய்திருந்தார்கள்.

### மானிய விலையில் வேளாண் இயந்திரம்விவசாயிகளுக்கு அழைப்பு :

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் நவீன வேளாண் கருவிகள் வழங்கவுள்ளதால் தகுதியான விவசாயிகள் வேளாண் பொறியியல் துறையில் விண்ணப்பித்து பயன்பெறலாம் கலெக்டர் ராஜேஷ். வெளியிட்ட அறிக்கைகிருஷ்ணகிரி: மாவட்டத்தில், நடப்பாண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உற்பத்தி செலவினை குறைக்கவும், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நவீன வேளாண் கருவிகள் பயன்பாட்டினை அதிகரிக்கும் நோக்கத்துடன் வேளாண் மற்றும் தோட்டக்கலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அதிக பட்சமாக, 50 சதவீத மானியத்தில் வேளாண் பொறியில் துறை மூலமாக வழங்கப்படவுள்ளதுபலவகை . தானிய கதிர் அடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம் எட்டு ) (குதிரைத்திறனுக்கு கீழ், நான்கு சக்கர களையெடுக்கும் இயந்திரம் )20 குதிரை திறனுக்கு கீழ்(, ஆர்ச்சர்ட் பிரேயர், விசைத்தெளிப்பான், பவர்டில்லர் எட்டு ) (குதிரைத்திறனுக்கு மேல், உழுவை கருவிகள், நெல் நடவு இயந்திரம், டிராக்டர் மற்றும் பவர் டில்லர் மூலம் இயக்கும் உபகரணங்கள், தேங்காய் மட்டை உரிப்பான், சுழற் கலப்பை, தீவணப்புல் வெட்டும் கருவி, மரம் அறுக்கும் கருவி போன்றவை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இக்கருவிகளை மானியம் மூலம் வழங்க கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 224 இயந்திரம் மற்றும் உபகரணங்களுக்கு ஒரு கோடியே, 14 லட்சத்து, 75 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதுஇத்தி.ட்டத்தில் பயன் அடைய விரும்பும் விவசாயிகள், பெயர் மற்றும் முகவரி, சர்வே எண், சிட்டா அடங்கள் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்கிருஷ்ணகிரி ., ஊத்தங்கரை, போச்சம்பள்ளி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 43, செட்டிம்பட்டி ரோடு, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னசந்திரம், ஓசூர்' என்ற முகவரியிலும் அணுகி விண்ணப்பங்களை வழங்கலாம்இ.வ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### வேளாண் விரிவாக்க மையம்உழவர் விவாதகுழுவினருக்கு பயிற்சி

ஈரோடு: ஈரோடு வட்டார வேளாண் விரிவாக்க அலுவலகத்தில், விவசாய கள அமைப்பாளர்களுக்கு, இரண்டு நாள் வேளாண் பயிற்சிகள் வழங்கப்பட்டதுஈரோடு. தாலுகா அலுவலக வளாகத்தில், ஈரோடு வட்டார வேளாண் விரிவாக்க அலுவலகம் அமைந்துள்ளதுஉழவன் பயிற்சி நிலையம் . மூலம், உழவன் விவாதக்குழு விவசாய கள அமைப்பாளர்களுக்கு இரண்டு நாள், வேளாண் துறை சார்ந்த பயிற்சி வகுப்புகள், துணை இயக்குனர் கார்த்திகேயன் தலைமையில் நடந்ததுஈரோடு வட்டார வேளாண் . விரிவாக்க துறை உதவி இயக்குனர் சண்முகசுந்தரம் மற்றும், 20க்கும் மேற்பட்ட விவசாய கள அமைப்பாளர்கள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்வேளாண் துறை., தோட்டக்கலை துறை, வேளாண் பொறியியல் துறை, பட்டு வளர்ப்பு துறை, கால்நடை துறை மற்றும் மீன் வளர்ச்சி துறையை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்தங்கள் துறை சார்ந்த திட்டங்கள்., அரசின் மானியங்கள், வேளாண் தொழில் நுட்பங்கள், பயிர் வளர்ப்பில் சந்தேகங்கள் குறித்து, விவசாய கள அமைப்பாளர்களின் கேள்விகளுக்கு, வேளாண் அதிகாரிகள் பதில் வழங்கினர்.

பயிற்சி வகுப்புகளின் முடிவில், விவசாய கள அமைப்பாளர்களுக்கு, 100 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

### விடுபட்ட கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட வலியுறுத்தல்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் விடுபட்ட கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடுமாறு கால்நடைத்துறை அறிவுறுத்தியுள்ளதுஇம்மாவட்டத்தில் . உள்ள, 3.5 லட்சம் கால்நடைகளுக்கு, தடுப்பூசி போடும் பணி, கடந்த செப்., 15ம் தேதி துவங்கி, 21 நாட்களுக்கு நடந்ததுதினமும் கால்நடை மருத்துவக்குழு ., ஈரோடு, அரச்சலூர், மொடக்குறிச்சி, அம்மாபேட்டை, அந்தியூர், பவானி, கவுந்தபாடி மற்றும் சத்தியமங்கலம் உள்பட அனைத்து பகுதிகளிலும், கிராமம்வாரியாக சென்று, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர்கிராம மக்கள் . அனைவரும், தங்களது கால்நடைகள் ஒன்றுகூட விடுபடாமல், அனைத்துக்கும் நோய் தடுப்பூசி போட, கால்நடைத்துறையினர் வலியுறுத்தி வருகின்றனர்இருப்பினும்., சில பகுதிகளில் கால்நடைகள் விடுபட்டிருக்கக்கூடும். எனவே, வைரஸ் கிருமிகள் மூலம், காற்று மற்றும் நீர் மூலம் வேகமாக பரவக்கூடிய, இந்நோயை கட்டுப்படுத்தவும், முன்னெச்சரிக்கையாக தடுக்கவும், தடுப்பூசி போடுவது அவசியமாகிறதுகால்நடைகள் தொடர்ந்து தாடையை அசைத்து கொண்டிருத்தல்., எச்சில் ஒழுகுதல், உணவு உண்ணாமல் இருப்பது போன்றவை, இந்நோய் தாக்கியதற்கான அறிகுறியாகும்தற்போது மழைக்காலம் துவங்கிவிட்டதால் ., கால்நடைகளுக்கு இந்நோய் பரவும் வாய்ப்பு அதிகம் உள்ளதுஎனவே ., கடந்த மாதம் தங்களது கால்நடைகளுக்கு, தடுப்பூசி போடாமல் விடுபட்டிருந்தால், உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவர் அல்லது கால்நடை மருத்துவமனையை அணுகி, தடுப்பூசி போடுமாறு, கால்நடை மண்டல இணை இயக்குனர் வணங்காமுடி கேட்டுக்கொண்டார்.

### மஞ்சள் உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம்

கூடலூர்கூடலூர் பகுதியில் இஞ்சியை தொடர்ந்து:, மஞ்சள் விவசாயத்திலும் விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்லைகூடலூர் பகுதியில் தேயி . போன்ற நீண்ட கால பயிர்களை தவிர, தற்காலிக பயன் தரும் சீசன் காய்கறிகளையும் பயிரிட்டு வருகின்றனர்இதில் ., நெல், பாகற்காய், பஜ்ஜி மிளகாய், பீன்ஸ் இஞ்சி, நேந்திர வாழை உள்ளிட்டவைகள் அதிகளவில் பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், கல்லிங்கரை பகுதியில் முதல் முறையாக மஞ்சள் விவசாயத்திலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்அப்பகுதியில் பயிரிட்டுள்ள . மஞ்சள் நன்றாக வளர்ந்துள்ளதால், நல்ல மகசூல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது . இப்பகுதியில் மஞ்சள் நல்லமகசூல் கிடைக்கும் பட்சத்தில் எதர்காலத்தில் மேலும் பல விவசாயிகள் மஞ்சள் உற்பத்தியில் ஈடுபட வாய்ப்புள்ளது.

"இப்பகுதியின் காலநிலை, மண் வளத்தை கருத்தில் கொண்டு, இங்கு விவசாய ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கால்நடைகளுக்கு நோய் அபாயம்

மஞ்சூர்மஞ்சூர் பகுதிகளில் உள்ள கால்நடைகள் பஜார் பகுதிகளில் சுற்றித்: திரிகின்றனபஜாரில் கொட்டப்படும் கழிவுகளை ருசி பார்த்திருப்பதால் ., கால்நடைகளுக்கு நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

"சம்பந்தப்பட்ட கால்நடை உரிமையாளர்கள் பஜாரில் கால்நடைகளை ஹாயாக சுற்றித்திரிவதை கட்டுப்படுத்தி மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிச் செல்ல வேண்டும்; கீழ்குந்தா பேரூராட்சி நிர்வாகமும் சுற்றித்திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்துவதுடன், கழிவுகளை அகற்றி சுற்றுப்புற சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டும்' என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தொடரும் மழையால் கோரை அறுவடை பணி பாதிப்புதீபாவளி நெருங்குவதால் ! விவசாயிகள் கவலை

கரூர்: தொடர் மின்வெட்டால், ஏற்கனவே பாய் உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில், தற்போது பெய்து வரும் தொடர் மழையால் கோரை அறுவடையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது .தீபாவளி நெருங்கும் நிலையில், போதிய வேலை இல்லாமல், கோரை விவசாயிகள் கவலையில் உள்ளனர்தமிழகத்தில் . அடிக்கடி நிலவி வரும் மின்வெட்டால் கரூர் மாவட்டத்தில் ஏற்கனவே பஸ் பாடி கட்டும் தொழில், ஜவுளி தொழில் மற்றும் கொசுவலை உற்பத்தி தொழில்கள், கோரைபாய் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுஇதனால் ., ஆயிரக்கணக்கான தினக்கூலி தொழிலாளர்கள் போதிய வேலை இல்லாமல் தவித்து வருகின்றனர்கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில். கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் கோரை அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதுகுறிப்பாக ., கரூர் மாவட்டத்தில் வாங்கல், என்புதூர்., பிச்சம்பாளையம், கடம்பங்குறிச்சி, தளவாய்பாளையம், தோட்டக்குறிச்சி, நெரூர், மரவாப்பாளையம், புதுப்பாளையம், திருமாகூடலூர், அச்சமாபுரம், சோமூர், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கோரை பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கோரை பயிர்கள் மூலம் மக்கள் உறங்க பயன்படுத்தும் பாய்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறதுகான்கிரீட் அமைக்கவும் கோரை . பயிர் பயன்படுத்தப்படுகிறதுதிரைசீலை ., நாற்காலிகள் செய்யவும் கோரை பயன்படுகிறது.

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக இருந்த கடுமையான மின்வெட்டால் கோரைபாய் உற்பத்தி பாதிக்கப்பட்டதுசமீப காலமாக மின்வெட்டு . நேரம் குறைந்ததுஇதனால் ., பாய் உற்பத்தி சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கரூர் வட்டார பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், கோரை அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

கரூர் அருகே நெரூரை சேர்ந்த கோரை பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கூறியதாவது:

கோரை பயிரைக் கொண்டு கை மூலம் பாய் தயாரிக்கும் தொழில்நுட்பம் தற்போது இல்லை. மின்சாரம் மூலம்தான் பாய்கள் அதிகளவில் தயாரிக்கப்படுகிறதுமின் . வெட்டு இல்லாத காலக்கட்டங்களில் காய்ந்த பதப்படுத்தப்பட்ட ஒரு கட்டு கோரைக்கு குறைந்த விலையே கிடைத்தது.

தீபாவளி பண்டிகையையொட்டி எதிர்பார்த்ததை போல கோரை பாய்க்கு அதிக ஆர்டர் கிடைத்ததுமின்வெட்டு நேரமும் ஓரளவுக்கு . குறைந்ததால், பாய் உற்பத்தி தொடங்கியதுஇதனால் ., கோரை புல்லுக்கு அதிக விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டதுஆனால்., கடந்த சில நாட்களாக கரூர் மாவட்டத்தில் விட்டு, விட்டு மழை பெய்து வருகிறதுஇதனால் ., அறுவடை செய்த கோரையை காயவைக்க முடிய வில்லைமேலும் ., அறுவடை செய்த கோரையை இரண்டு நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியாதுஇதனால் சில.கலர் மாறி விடும் . பகுதிகளில் அறுவடை பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுகடந்த . இரண்டு மாதங்களாக மின் வெட்டு காரணமாக பாய் தயாரிக்க முடியாத நிலையில், கோரைக்கு போதிய விலை கிடைக்கவில்லைதற்போது., பாய் உற்பத்தி தொடங்கிய நிலையில், தொடர் மழை காரணமாக, கோரை அறுவடை நிறுத்தப்பட்டுள்ளதுஇதனால் தீபாவள .ி பண்டிதைக நெருங்கும் நிலையில், தொழிலாளர்களுக்கு போதிய வேலை இல்லாத நிலை உள்ளதுஇவ்வாறு . .அவர்கள் கூறினர்

## விதை பரிசோதிக்க வாய்ப்பு

காஞ்களைவிதை:புரம்சி, முளைப்டுத்தபனைக்கு உட்திறன் சோதபுத், விவ-கயிசா .ளதுடுள்பட்கப்ளுக்கு அழைப்பு விடுக்

மழையால், விவகாகஇதற் .ளனர்டியை துவங்க உள்பயிகள் சாகுசா, ஆடுதுறை45, ஆடுதுறை47, ஆடுதுறை39 ஆகிய விதை .ளனர்துள்ராக வைத்களை தயா விதைக்கும் முன், முளைப்ளதா எனதிறன் உள்புத், ஆய்.சியம்வது அவசெய்வு விவ-யிகள்சா, விதை மாதிரியை, காஞ்சோபுரம் விதை பரிசிதனை நிலையத்தில் பரி-சோளலாம் எனதித்து கொள், விதை பரிவலர் பெருமாள்தனை அலுசோ தெரி-வித் .துள்ளார்

## பயிர் கடன் வழங்கும் நிகழ்ச்சி

செஞ்சிவல்லம் ஒன்றியம் பென்னகர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் :
.சங்க பேரவை கூட்டம் மற்றும் பயிர்கடன் வழங்கும் விழா நடந்தது
தலைவர் அசோக்குமார் தலைமை தாங்கினார்செயலாளர் சிவக்குமார் .
.தீர்மானங்களை வாசித்தார்
செஞ்சி கூட்டுறவு வேளாண்மை விற்பனை சங்க தலைவர் விநாயகமூர்த்தி கலந்து கொண்டு 53.25 லட்சம் ரூபாய் மதிப்பில் பயிர் கடன்களை வழங்கினார்.

இயக்குனர்கள் ஜெயச்சந்திரன், ஜெயராமன், தர்மலிங்கம், முனுசாமி, குணசேகரன், காஞ்சனா, சரவணன், கடன் சங்க ஊழியர் சுப்பிரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆண்டறிக்கை, வரவு, செலவு கணக்குகளுக்கு பேரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டது.

## பாமாயில் அறுவடை செயல் விளக்கம்

திண்டிவனம் திண்டிவனம் அடுத்த விட்டலாபுரத்தில்:பாமாயில் பயிர் அறுவடை செய்வது குறித்து செயல் விளக்கம் நடந்தது.
திண்டிவனம் அருகே உள்ள விட்டலாபுரம் விவசாயி ராமதாஸ் நிலத்தில் பாமாயில் பயிர் (எண்ணெய்ப் பணைஅறுவடை செய்வது குறித்து செயல் விளக்கம் (
வேளாண்மை .நடந்தது உதவி இயக்குனர் கென்னடிஜெபக்குமார் தலைமை தாங்கினார்.கோத்ரெஜ் அக்ரோபெட் மேலாளர் அசோகன் முன்னிலை வகித்தார் .
வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெபக்குமார் பேசுகையில், பாமாயில் கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாகவும், நான்கு ஆண்டுகளுக்கு பராமரிப்பு மானியமும் அரசு சார்பில் வழங்கப்படுகிறதுஊடு பயிராக துவரை ., காய்கறிகள், மணிலா, தர்பூசணி, வாழை போன்றவை பயிரிடலாம்ஒரு முறை பாமாயில் பயிர் . செய்தால் போதும் 40 ஆண்டுகள் வருமானம் கிடைக்கும்.என்றார் .
வேளாண்மை அலுவலர் எத்திராஜ், ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், கோத்ரெஜ் அக்ரோபெட் நிறுவன அலுவலர்கள் ராமன், சசிகுமார், இளவழகன் கலந்து கொண்டனர்.

## தீபாவளியால் உளுந்தம் பருப்பு விலை கிடு கிடுஒரே வாரத்தில் குவிண்டாலுக்கு ரூ.600 உயர்வு

சேலம்: தீபாவளி பண்டிகைக்கு இன்னும் குறைந்த நாட்களே உள்ள நிலையில், வியாபாரிகள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து செயல்படுவதால், உளுந்தம் பருப்பின் விலை, ஒரே வாரத்தில் குவின்டாலுக்கு, 600 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளதுதமிழகத்துக்கு தேவையான உளுந்து., உளுந்தம் பருப்பு, மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா, குஜாரத் ஆகிய மாநிலங்களில் இருந்தும், பர்மாவில் இருந்து கப்பல் மூலம் சென்னை கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து, தமிழகத்தின் பிற நகரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
கடந்த ஆண்டு, தமிழகத்தில் எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால், வெளி மாநிலம், வெளி நாடுகளிலிருந்து, உளுந்தம் பருப்பை எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு வியாபாரிகள் தள்ளப்பட்டனர்கடந்த மாதம் வ .ரை, வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வாரம், 25 லோடு வரை, உளுந்தம் பருப்பு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது.
தீபாவளி பண்டிகைக்கு இன்னும், பத்து நாட்களே உள்ள நிலையில், அவற்றின் வரத்தில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளதுதற்போது . வாரத்துக்கு, ஏழு லாரிகளில் மட்டுமே விற்பனைக்கு வருகிறதுஅது மட்டுமின்றி . பர்மா ரக உளுந்தம் பருப்பை விற்பனைக்கு கொண்டு வரும் வியாபாரிகள், விலை உயர்வை எதிர்பார்த்து, அவற்றை குடோன்களில் பதுக்கி வைத்துள்ளனர்மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு . வரும், உளுந்தம் பருப்பின் வரத்தில் சரிவு ஏற்பட்டதை அடுத்து, கடந்த வாரம் குவின்டாலுக்கு, 400 ரூபாய் வரை, விலை உயர்ந்தது. நேற்று மேலும், 200 ரூபாய் விலை உயர்த்தப்பட்டுள்ளதுஅக்டோபர் முதல் வாரத்தில்., முதல்ரக உளுந்தம் பருப்பு மொத்த விலையில், குவின்டால், 6,600 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் குவின்டால், 6,100 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம் குவின்டால், 5,800 ரூபாய்க்கும் விற்றதுஇந்த விலை., 400 ரூபாய் அதிகரித்து, முதல்ரகம் குவின்டால், 7,000 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் குவின்டால், 6,400 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம்

குவின்டால், 6,100 ரூபாய்க்கும் விற்பனையானதுநேற்று குவின்.டாலுக்கு மேலும், 200 ரூபாய் அதிகரித்து, முதல்ரகம், 7,200 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 6,600 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 6,300 ரூபாய்க்கும்
விற்பனையானதுவடமாநிலங்களில் இருந்து. தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த உளுந்தம் பருப்பு வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், மொத்த வியாபாரிகள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து, உளுந்தம் பருப்பை பதுக்கி வருவதால், விலை, மேலும் உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

### தேங்காய் உற்பத்தி குறைவுதொழிலாளர்கள் தவிப்பு

நங்கவள்ளி: தேங்காய் உற்பத்தி குறைந்ததால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள, 5,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், வேலையின்றி தவித்து வருகின்றனர். ஜலகண்டாபுரம் அருகே சூரப்பள்ளி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில், நூற்றுக்கும் மேற்பட்ட தேங்காய் மண்டிகள் உள்ளனஇங்கிருந்து ., வட மாநிலங்களுக்கு, அதிகளவில், தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறதுமரம் ஏறி . தேங்காய் பறிப்போர், தேங்காய் அள்ளுவோர், தேங்காய் உரிப்போர், லோடு மேன்கள், வியாபாரிகள் என, 5,000க்கும் மேற்பட்டோர், இத்தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றனர்கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால்., தண்ணீரின்றி ஏராளமான தென்னை மரங்கள் காய்ந்தனவறட்சிக்குத் தப்பித்து ., உயிருடன் இருக்கும் தென்னை மரங்களிலும், தேங்காய் காய்ப்பு இல்லாததால், தேங்காய் மண்டி உரிமையாளர்கள், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. அதனால், தேங்காய் தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்கள், வருமானமின்றி தவித்து வருகின்றனர்.

### அக்.,30 விவசாயிகள்குறைதீர் கூட்டம்

நாமக்கல்அக்டோபர்" :, 30ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கைநாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட :

அரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், அக்டோபர், 30ம் தேதி, காலை, 10.30 மணிக்கு நடக்கிறதுநாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி . தலைமை வகிக்கிறார்அதில் ., விவசாயிகள் பங்கேற்று, தங்களது குறைகளை, மனுக்களாக அளித்து தீர்வு காணலாம் இவ்வாறு அதில்.கூறப்பட்டுள்ளது.

## முட்டை விலை ஒரே நாளில் 7 காசு உயர்வுதமிழகம், கேரளாவில் 356 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 356 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில், ஏழு காசு உயர்ந்தது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 349 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஏழு காசு அதிகரித்து, 356 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.தற்போது, நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலையும் உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில், முட்டை விலை ஏழு காசு உயர்ந்துள்ளது. இது, பண்ணையாளர்களை பெரும் மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 345, பெங்களூரு, 335, மைசூரு, 338, ஹைதராபாத், 322, மும்பை, 358, விஜயவாடா, 324, கோல்கத்தா, 380, பர்வாலா, 337, டில்லி, 350.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை கிலோ, 67 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## இறக்குமதி அதிகரிப்பால் இயற்கை ரப்பர் விலை சரிவு

உள்நாட்டு சந்தையில், இயற்கை ரப்பர் வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை கடுமையாக சரிவடைந்துள்ளது.கொச்சி சந்தையில், ஒரு கிலோ 'ஆர்.எஸ்.எஸ்–4' ரக இயற்கை ரப்பர் விலை,160 ரூபாயாக வீழ்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த பிப்ரவரி மாதத்திற்கு பிறகு காணப்படும் மிகப்பெரிய சரிவு என, ரப்பர் வர்த்தகர்கள் தெரிவித்தனர். நடப்பாண்டு இயற்கை ரப்பர் உற்பத்தி குறைந்துள்ளது. அதனால், ரப்பருக்கான தேவை அதிகரித்து, அதன் விலை உயரும் என, எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கு மாறாக, இயற்கை ரப்பர் விலை உயர்ந்துள்ளதற்கு, அதன் இறக்குமதி தான் காரணம். இறக்குமதி செய்யப்பட்டஇயற்கைரப்பர் தாராளமாக கிடைப்பதால், உள்நாட்டில் இதன்விலை மிகவும் சரிவடைந்துள்ளது.நடப்புசெப்டம்பர் மாதத்தில், கடந்த மூன்று வாரங்களில், இயற்கை ரப்பர் விலை, 10 சதவீதம் குறைந்து, கிலோ, 177 ரூபாயாக சரிவடைந்தது.

இது, தற்போது, மேலும்வீழ்ச்சி கண்டு, 160 ரூபாயாக குறைந்துள்ளது. வரும் ஜனவரி வரை, உள்நாட்டுசந்தையில், இயற்கை ரப்பர்வரத்து அதிகரிக்கும் என்பதால், அதன் விலை மேலும் குறையும் என, தெரிகிறது.இதுகுறித்து ரப்பர் வர்த்தகர் ஒருவர் கூறும்போது, "இயற்கை ரப்பருக்கு தற்போது, முக்கியமான உற்பத்தி காலமாகும். மாதத்திற்கு சராசரியாக, 1 லட்சம் டன் இயற்கை ரப்பர் உற்பத்தியாகும். இதன் காரணமாக, இதன் விலை, மேலும் சரிவடைந்து, கிலோ, 158 ரூபாயாக குறையவும் வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தார்.

– பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## மல்லிகை ஏற்றுமதி நிறுவனம்திண்டுக்கல்லில் துவக்க பரிந்துரை :

திண்டுக்கல்: மல்லிகை ஏற்றுமதிக்கான உற்பத்தி நிறுவனத்தை திண்டுக்கல்லில் துவங்கலாமென தோட்டக்கலைத் துறையினர், அரசுற்கு பரிந்துரை செய்து உள்ளனர். திண்டுக்கல், திருச்சி, மதுரை, ராமநாதபுரத்தில் மல்லிகை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மார்ச்சிலிருந்து ஜூன் வரை மல்லிகை விளைச்சல் அதிகளவில் இருக்கும். அதிக வரத்து காரணமாக விவசாயிகள்

எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. இதற்கு அடுத்த கட்டமான அக்டோபரில் இருந்து ஜனவரி வரை மல்லிகை மகசூல் போதுமானதாக இருக்காது. வரத்து குறைவு என்பதால், அதிக விலைக்கு விற்கப்படும். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத அளவிற்கு மல்லிகை சாகுபடியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் மல்லிகைக்கான தேவை அதிக அளவில் உள்ளது. வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் வெளிநாடுகளுக்கு மல்லிகை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான உற்பத்தி நிறுவனங்களை துவக்குவதற்கான ஆய்வு சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில், திண்டுக்கல்லில் உற்பத்தி நிறுவனத்தை துவக்கலாம், என தோட்டக்கலைத்துறையினர், அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

## கோவை, திருப்பூரில் வெங்காயம், தக்காளி விலை உயர்வு

கோவை: கோவை மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால், பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயத்தின் விலை உயர்ந்தது.

நடப்பாண்டின் துவக்கத்தில், கிலோ, 12 ரூபாய்க்கு விற்கப்பட்ட பெரிய வெங்காயம், மூன்று மாதங்களாக திடீரென விலை உயர்ந்தது. கடந்த மாதம், சில்லரை விற்பனையில், கிலோ, 85 ரூபாய்க்கு விற்றது. இம்மாத துவக்கத்தில், விலை திடீரென சரிந்து, கிலோ, 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, மீண்டும் விலை உயரத் துவங்கியுள்ளது. கோவை மொத்த மார்க்கெட்டில், நேற்றைய நிலவரப்படி, பெரிய வெங்காயம் கிலோ, 50 முதல் 60 ரூபாய் வரை விற்கப்பட்டது.

சில்லரை சந்தையில், கிலோ, 56 முதல், 70 ரூபாய் வரையிலும் விற்கப்பட்டது. கோவை காய்கறி மார்க்கெட்களுக்கு, பெரிய வெங்காயம், மகாராஷ்டிரா மாநிலம் புனே, சோலாப்பூர் மற்றும் கர்நாடகாவில் இருந்து வருகிறது. தினமும், 500 டன் பெரிய வெங்காயம் வரும். நேற்றைய நிலவரப்படி, 250 டன் மட்டுமே வந்தது. இதுவே விலை உயர்வுக்கு காரணம்.

சின்ன வெங்காயம்:

கோவைக்கு தேவையான சின்ன வெங்காயம், செஞ்சேரிமலை, பொங்கலூர், பல்லடம், அன்னூர், சுல்தான்பேட்டை, உடுமலை, ஆனைமலை பகுதியில் இருந்தும், தமிழக - கர்நாடக எல்லையிலுள்ள சத்தியமங்கலம், தாளவாடி, மைசூர், சாம்ராஜ்நகர், குண்டல்பேட் பகுதியில் இருந்தும் வருகிறது. கோவையிலுள்ள மொத்த மார்க்கெட்களுக்கு தினமும், 80 டன் சின்ன வெங்காயம் வருகிறது. தற்போது, வரத்து குறைந்துள்ளது. தினமும், அதிகபட்சமாக 10 டன் மட்டுமே கோவைக்கு வருகிறது. இதனால், விலை உயர்ந்து வருகிறது. நடப்பாண்டின் துவக்கத்தில், ஒரு கிலோ சின்ன வெங்காயம், 25 ரூபாய்க்கு விற்றது. ஆகஸ்ட்டில், கிலோ, 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது. செப்டம்பரில் விலை சரிவு ஏற்பட்டு, கிலோ, 40 ரூபாயானது. தற்போது, வரத்து குறைந்ததால், மீண்டும் விலை உயரத் துவங்கியுள்ளது. நேற்றைய நிலவரப்படி, மொத்த மார்க்கெட்டில், சின்ன வெங்காயம் கிலோ, 50 ரூபாய் முதல், 60 ரூபாய் வரையிலும், சில்லரை சந்தையில், கிலோ, 55 ரூபாய் முதல், 70 ரூபாய் வரையிலும் விற்கப்பட்டது. இதேபோல், வடகிழக்கு பருவ மழையால், தக்காளி வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது. திருப்பூர் மற்றும் கோவைக்கு, அதன் சுற்றுப் பகுதிகளில் இருந்து தக்காளி வரும். தற்போது, மழை காரணமாக, தக்காளி வரத்து குறைந்துள்ளதால், 25 ரூபாயாக இருந்த ஒரு கிலோ தக்காளி, கிலோவுக்கு, 15 ரூபாய் உயர்ந்து, கிலோ, 40 ரூபாய்க்கு விற்பக்கப்படுகிறது. மொத்த விற்பனையில் கிலோ, 40 ரூபாய், சில்லறையில் கிலோ, 45 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

விவசாயிகள் கூறுகையில்,' தினமும் மழை பெய்வதால், தக்காளி செடியில் உள்ள பூக்கள் உதிர்ந்து விடுகிறது. தக்காளி மழையில் நனைந்து விடுவதால், பறித்து பாதுகாப்பாக சந்தைக்கு கொண்டு வருவதில் சிரமம் ஏற்படுகிறது. இப்போது இரண்டாம் தர தக்காளி மட்டுமே விற்பனைக்கு வருகிறது. முதல் தரம் கிலோ 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது' என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 24.10.2013

### பாகிஸ்தான், சீனா, எகிப்தில் இருந்து வெங்காயம் இறக்குமதிக்கு டெண்டர்



வெங்காயம் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக பாகிஸ்தான், சீனா, ஈரான், எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்வதற்கு நாபெட் டெண்டர் விட்டுள்ளது. மொத்த மார்க்கெட்டில் வெங்காயம் விலை கிலோ ரூ.50 முதல் 60 வரை விற்றபோதிலும், சில்லரை விலையில் கிலோ ரூ.90க்கு விற்கிறது. எனவே விலை உயர்வைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்திய தேசிய வேளாண்மை கூட்டுறவு மார்க்கெட்டிங் சம்மேளனம் (நாபெட்) உலகளாவிய டெண்டர் கோரியுள்ளது.

பாகிஸ்தான், ஈரான், சீனா, எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து வரத்தை அதிகரித்தால் விலை குறையும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து ஒரு டன் 200 முதல் 250 அமெரிக்க டாலர் விலையில் இறக்குமதி செய்யப்படும். எகிப்தில் இருந்து ஒரு டன் 350 டாலர் விலையில் இறக்குமதி செய்யப்படும். அதேவேளையில், ஏற்றுமதி வெங்காயத்தின் குறைந்தபட்ச விலையை ஒரு டன்னுக்கு 900 டாலர் என்று மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

சமீபத்திய விலை உயர்வுக்கு காரணம்: டெல்லியில் வெங்காயம் விலை உயர்வுக்கு முக்கிய காரணம் மொத்த விலை வியாபாரிகளின் ஏகபோகமே கார ணம். டெல்லியில் மொத்த விலை மார்க்கெட்டில் கிலோ ரூ.48 முதல் 51 வரை கடந்த 2 தினங்களுக்கு முன்பு விற்கப்பட்டது. ஆனால், சில்லரை விலை யில் கிலோ ரூ.90க்கு விற்கப்பட்டது. இந்த விலை ஏற்றத்தை தடுக்க வேளாண்மை விளைபொருள் விற்பனை கமிட்டி (ஏபிஎம்சி) சட்டத்தை திருத்த வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சகத்தின் இணை செயலாளர் சஞ்சீவ் சோப்ரா தெரிவித்தார்.

வேளாண் விளைபொருள் விற்பனை என்பது மாநில அதிகார வரம்பிற்குள் வரும் விஷயம். எனவே வேளாண்மை விளை பொருள் விற்பனையில் சீர்திருத்தம் செய்வதற்கு தேவையான சட்டத்திருத்தம் செய்ய வரைவு மசோதாவை தயாரித்து மாநிலங்களுக்கு மத்திய அரசு கடந்த 2003ல் அனுப்பியது. இதை ஏற்று 16 மாநிலங்கள் சட்டத்தை திருத்தியுள்ளன. ஆனால், டெல்லியில் சட்டத் திருத்தம் செய்யப்படவில்லை. இதுவும் விலை உயர்வுக்கு காரணம்.

"3 வாரங்களுக்கு விலை குறையாது"

கிருஷி விஞ்ஞான் கேந்திராவின் 8வது தேசிய மாநாட்டில் பங்கேற்க பெங்களூர் வந்த மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் நிருபர்களிடம் வெங்காயம் விலை உயர்வு குறித்து கூறுகையில், வெங்காய விலை இன்னும் 2 அல்லது 3 வாரம் வரையில் குறைய வாய்ப்பில்லை என்றார். அதன்பிறகு விலை குறையுமா என்ற நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்த பவார் 'அப்படி உறுதியாக கூற நான் ஜோதிடர் இல்லை. ஆனால், விளைபயிர்கள் குறித்து எனக்கு சிறிது தெரியும் என்ற அடிப்படையில் அவ்வாறு பதிலளித்தேன். என்னுடைய தனிப்பட்ட கணக்குப்படி தற்போதைய விலையேற்றம் அதிகபட்சம் மூன்று வாரங்கள் நீடிக்கும் என்று நினைக்கிறேன்.

வெங்காயத்தை பதுக்கி வைத்து செயற்கையாக விலையேற்றத்தை ஏற்படுத்துவோர் மீது அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க அனைத்து மாநில முதல்வர்களும் முன்வர வேண்டும். எந்த ஒரு மாநிலமாவது வெங்காய இறக்குமதி குறித்த கோரிக்கையை முன்வைத்தால் அதை பரிசீலிக்க தயாராக இருக்கும்படி தேசிய விவசாய கூட்டுறவு மார்க்கெட்டிங் கூட்டமைப்பின் இயக்குநரிடம் நான் அறிவுறுத்தியுள்ளேன். இவ்வாறு சரத்பவார் கூறினார்.

**முட்டை விலை மேலும் உயர்வு**



நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள்

பங்கேற்றனர். விற்பனை நிலவரம், பிற மண்டல முட்டை விற்பனை விலை குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. முட்டை விலையில் 7 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து முட்டையின் பண்ணை கொள்முதல், 349 காசில் இருந்து 356 காசாக நிர்ணயிக்கப்பட்டது.

ஒரே வாரத்தில் முட்டை விலை 10 காசு வரை அதிகரித்துள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டையின் நுகர்வு தொடர்ந்து அதிகரித்து வருவதால், முட்டை விலை உயர்ந்துள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

முட்டைகோழி ஒரு கிலோ ரூ.56, கறிக்கோழி ஒரு கிலோ ரூ.67 என விலை நிர்ணயிக்கப்பட்டது. பிற மண்டலத்தில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விவரம்: (பைசாவில்) சென்னை , 345, பெங்களூரு , 335, மைசூர் , 338, ஐதராபாத் , 322, மும்பை , 358, விஜயவாடா , 324, கொல்கத்தா , 380, பர்வாலா , 337, டெல்லி , 350 காசுகள்

**சம்பா, தாளடி நெற்பயிர்களில் களை கட்டுப்படுத்தும் வழிமுறை 100 நாள் வேலைத்திட்டம் விவசாய நிலங்களில் வாழை கன்று நடும்பணி**

சீர்காழி ஒன்றியம் திருப்புன்கூர் ஊராட்சியில் 100 நாள் வேலை திட்டத்தில் தனியார் நிலத்தில் வாழைக்கன்று நடும்பணி நடந்தது.

நாகை மாவட்டம் சீர்காழி அருகே திருப்புன்கூர் ஊராட்சியில் 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக நரிமுடுக்கு கிராமத்தில் லதா என்பவருக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தில் வாழைக்கன்று நடும் பணி யை வட்டார வளர்ச்சி கூடு தல் அலுவலர் சந்தானகிருஷ்ணன் துவக்கி வைத் தார்.

அவர் பேசும்போது, சீர்காழி ஒன்றியத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் வாய்க்கால், குளம் தூர்வாறுதல், மரக்கன்று நடுதல், பண்ணைக்குட்டை வெட்டுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

தற்போது இந்த திட்டத்தின் கீழ் ஒன்றியத்தில் உள்ள 37 ஊராட்சிகளில் தேவையான இடங்களில் வாழைக்கன்றுகள் நடும் பணி துவங்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் பயனடைவார்கள் என்றார். ஊராட்சி தலைவர் விஜயகுமார், துணைத்தலைவர் சுமதி சுவாமிநாதன், ஊராட்சி செயலாளர் சாமிதாஸ் உடனிருந்தனர்.

**பெரிய கண்மாய் பகுதியில் நேரடி நெல் விதைப்பு விழிப்புணர்வு முகாம்**

ராமநாதபுரம் பெரிய கண்மாய் ஆயக்கட்டு பகுதியில் நே ரடி நெல் விதைப்பு செய்ய விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

ராமநாதபுரம் பெரியகண்மாய் ஆயக்கட்டுப் பகு தியில் நேரடி நெல் விதை ப்பு விழிப்புணர்வு முகாம், முதுனாள் கிராமத்தில் நடந்தது. முகாமிற்கு ராமநாதபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் ராமசாமி பாண டி யன் தலைமை வகித்தார். அவர் பேசுகையில்,

“பருவ நிலை மாற்றத் தின் சூழ்நிலை யினை கருத் தில் கொண்டு ராமநாதபுரம் பெரிய கண் மாய் பகுதியில் நேரடி நெல் விதைப்பு செய் வதால், சாகுபடி செலவை யும், தண்ணீரையும் மிச்சப்படுத்தலாம்“ என்றார்.

பெரியகண்மாய் பாசன சங்கத் தலைவர் பாலசுந்தரமூர்த்தி பேசுகையில், “பெரிய கண்மாய் மூலம் முதுனாள், தொருவளூர், கவரங்குளம், அச்சுந்தன்வயல், பாப்பா குடி, களத்தாவூர், புத்தேந்தல் மற்றும் கூரியூர் கிராமங்க ளில் 4 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகி றது. சென்ற ஆண்டு பருவ மழை பொய்த்ததால், அச்சுந்தன்வயல் கிராம விவசாயி கள் நெல்லுக்கு பதில் எள் மற்றும் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்து, நல்ல மகசூல் பெற்றனர்.

நடப்பு ஆண்டில் பருவ மழை தாமதமானதால், புத் தேந்தல் கிராம விவசாயிகள் 400 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்துள்ள னர். அதேபோல் மற்ற கிராம விவசாயிகளும் நடப்பு ஆண் டில் நேரடி நெல் விதைப்பு முறையினை கடைப்பிடித்து, நிலத்தை தரிசாகவிடாமல் இருக்க வேண்டும்“ என்றார்.

நேரடி நெல் விதைப்பு க்கு விதை நேர்த்தி முறைகள், உரமிடல் மற்றும் சாகுபடி முறைகள் பற்றி, ராமநாதபுரம் வேளாண்மை அலு வலர் ராஜலெட்சுமி விளக்கி னார். முன்னோடி விவசாயிகளான மலைச்சந்திரன், கோபிநாதன், விநாயக சண்முகவேல், மகாதேவன், கரு ணாநிதி, சாத்தையா மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை விதை உதவி அலுவலர் திருஞானமணி, வேளாண்மை உதவி அலு வலர் சுதாமதி செய்தனர்

**காளானுக்கு கடும் கிராக்கி அப்படியே அள்ளுவதால் டிமாண்ட்**

வெஜிடபிள் பிரியாணி தவிரவும், வடை, தோசை என அனைத்து உணவு வகைகளிலும் தற்போது தவறாமல் இடம் பிடித்து விடுவதால், திருவில்லிபுத்தூர்

நகருக்கு வரும் காளான்களை பொதுமக்கள் அப்படியே அள்ளி விடுகின்றனர். இதனால், நகரில் காளானுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

காளான்களில் குடைக்காளான், சிப்பி காளான், பால் காளான், பட்டன் காளான் என பல்வேறு வகைகள் உண்டு. ஏராள மான வகைகளில் காளான் கள் இருந்தாலும் குறிப்பிட்ட சில காளான் வகைகளை மட்டுமே உணவுக்கு பயன்படுத்துகிறோம். தற்போது பொதுமக்கள் காளான் உணவுகளை அதிகளவு உணவில் பயன்படுத்துகின்றனர். இதனால் உணவுக்காளான் தேவை அதிகரித்துள்ளது. குறிப்பாக, அசைவ உணவு பிடிக்காதவர்கள், அதற்கு மாற்றாக காளான் உணவுகளை விரும்பி சாப்பிடுகின்றனர்.

காளான்களை அதிகளவு பயன்படுத்துவதினால் திருவில்லிபுத்தூரில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 3 தினங்களும் காளான் கிடைப்பதில்லை.

மற்ற நாட்களிலும் கடைகளில் குறைந்த அளவே விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் புரட்டாசி என்பதால், அதிகம் பேர் அசைவ உணவுகளை தவிர்த்து விட்டு சைவ உணவுகளை மட்டும் பயன்படுத்துவார்கள். இவ்வாறு கடந்த மாதம் அதிக பொதுமக்கள் காளான்களை பயன்படுத்தியதால் காளான்களுக்கு கடுமையான டிமாண்ட் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து வியாபாரி ஒருவரிடம் கேட்ட போது, ‘‘திருவில்லிபுத்தூர் பகுதிக்கு கோயம்புத்தூர் பகுதியில் இருந்து விற்பனைக்கு காளான்கள் வருகின்றன. நகரைப் பொருத்தவரை குறிப்பிட்ட சிலர்தான் காளான்கள் விற்பனை செய்கின்றனர். தற்போது அதிகளவு பொதுமக்கள் காளான்களை பயன்படுத்தி வருகின்றனர். ஆரம்ப காலங்களில் திருமணம் போன்ற சுப காரியங்களில் வெஜிடபிள் பிரியாணிக்கு கூட்டாக காளான்களை பயன்படுத்தினர். தற்போது காளான் தோசை, காளான் வடை என பல ரக உணவுப்பொருட்களில் காளான் களை பயன்படுத்துவதால் அதன் தேவை அதிகரித்துள்ளது. மேலும், சுப காரிய

நிகழ்ச்சிகளுக்காக, சந்தைக்கு வரும் காளான் கள் அனைத்தையும் மொத் தமாக வாங்கிச் செல்வதால் வாரத்தில் 3 நாட்கள் காளான் கிடைக் காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காளான் அதன் தகுதிக்கேற்ப 30 ரூபாயிலிருந்து 45 ரூபாய் வரை விற்கப்படுகிறது,'' என்றார்.

**திருச்சியில் வரும் 27 ம் தேதி விவசாயிகள் சங்க அவசர கூட்டம்**

தமிழக சட்டசபை ஒரு வாரம் நடை பெற உள்ள நிலையில், திருச்சியில் வரும் 27ம் தேதி காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலசங்க அவசர ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

தமிழக சட்டசபை மழைக்கால கூட்டத் தொடர் ஒரு வாரம் நடை பெற உள்ள நிலையில், 27 ம் தேதி நடக்கும் காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலசங்கம் அவசர கூட்டத்தில் 5 பொருள்கள் மீதான முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளது.

இது குறித்து செயல் தலைவர் ராஜாராம் கூறுகையில், அதிகம் விளையும் வாழை சாகுபடி, வாழை ஆராய்ச்சி மையமும் திருச்சியில் தான் உள்ளது. தமிழக முதல்வர் தொகுதியான ஸ்ரீரங்கத்தை மையமாக வைத்து ஸ்ரீரங்கத்தில் மிகப்பெரிய வாழை வணிக வளாகம் மூலம் வாழை உபபொருட்கள் தயாரிக்கும் இன்டர்நேஷனல் ஆலை அமைக்க வேண்டும். மிகப்பெரிய மாவட்டமான திருச்சியை 2ஆக பிரித்து ஸ்ரீரங்கம் மாவட்டம் என பெயரிட்டு அதில் ஸ்ரீரங்கம் கோட்டம் மற்றும் முசிறி கோட்டம் இரண்டையும் இணைக்க வேண்டும். முன்னாள் முதல்வர் மறைந்த எம்ஜிஆர் கனவான திருச்சியை 2ம் தலைநகரமாக்க வேண்டும் என்பது உள்பட 5 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளது. இந்த தீர்மானங்களை மாவட்ட கலெக்டர் மூலமாக தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட உள்ளது.

இந்த கூட்டத்தில் செயலாளர் காந்திபித்தன், துணை செயலாளர் சுப்ரமணியன், இணைசெயலாளர்கள் கோபாலதேசிகன், மணிக்குட்டி, பொருளாளர் ஜெபாமாலை

, காப்பாளர்கள் தீட்ஷிதர் பாலசுப்ரமணியம், முன்னாள் பொறியாளர் நடராஜன், சிராஜுதின் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**தேயிலை விவசாயிகள் சில்வர்டிப்ஸ் உற்பத்தியில் நல்ல லாபம் பெறலாம்**

சில்வர் டிப்ஸ் தேயிலை உற்பத்தி செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டது.

மஞ்சூர் அருகே முள்ளிமலை அரசு உயர்நிலைப்பள்ளியில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. தோட்டக்கலை துறை வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை(அட்மா) திட்டத்தின் கீழ் நடைபெற்ற முகாமிற்கு ஊர் தலைவர் போஜாகவுடர் தலைமை தாங்கினார். கெட்சிகட்டி ஊர் தலைவர் ராமன், அர்ஜுணா கவுடர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திட்ட உழவர் நண்பர் ஆரி வரவேற்றார்.

உபாசி வேளாண் அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் மகாலிங்கம் பேசுகையில், ‘‘சந்தையில் சில்வர் டிப்ஸ் தேயிலைக்கு கிராக்கி இருக்கிறது. கிலோ ஒன்றுக்கு ரூ.3ஆயிரம் வரை விலை கிடைக்கிறது. சில்வர் டிப்ஸ் தேயிலை உற்பத்தி மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பாடடையும்,’’ என்றார். தேயிலை விவசாயத்தில் உள்ள திட்டங்கள் மற்றும் பூச்சி நோய் மேலாண்மை குறித்து விளக்கப்பட்டது.

தொழில்நுட்ப வல்லுநர்கள் ஜான்பாஸ்கோ, ரம்யா ஆகியோர் திட்ட செயல்பாடுகள், தோட்டக்கலைதுறை புதிய திட்டமாகிய பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் மூலம் காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகள் குழு அமைத்து பயன் பெறும் வழிமுறை, தேயிலையில் நுண்ணுட்டத்தின் அவசியம் மற்றும் மண் மாதிரி, பரிசோதனை குறித்து விளக்கப்பட்டது.

மேலும், தேயிலை தோட்டத்தில் சில்வர்டிப்ஸ் தேயிலை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில் மேல்குந்தா, கெட்சிகட்டி, காந்திபுரம், கெரப்பாடு முள்ளிமலை, தொட்டகம்பை பகுதி விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் சமூக ஆர்வலர் பெள்ளி நன்றி கூறினார்.

**மானிய விலையில் வீரியரக மிளகாய்**

விருத்தாசலம் அரசு தோட்டக்கலை பண்ணையில் குழிதட்டு முறையில் வீரிய ரக மிளகாய் நாற்று உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இது குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி கூறியதாவது:

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ஆறே முக்கால் லட்சம் பிரியங்கா என்கிற வீரிய ரக மிளகாய் நாற்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இவைகள் அனைத்தும் கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இதில் முதற்கட்டமாக தற்போது 3 லட்சம் கன்றுகள் தயாராகி விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது.

தேவைப்படும் விவசாயிகள் ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் இயங்கி வரும் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகி 50 சதவீத மானிய விலையில் மிளகாய் கன்றுகளை பெற்று பயனடையலாம், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.10.2013**

**காய்க்காத மரங்களை அகற்றிவிட்டு புதிய மரக்கன்றுகள் வளர்க்க மானியம் தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல்**



தேனி,

கொட்டை முந்திரி, மா சாகுபடியில் காய்ப்பு திறன் முடிந்து போன மரங்களை அகற்றிவிட்டு புதிய மரக்கன்றுகள் நடவு செய்ய மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து தேனி தோட்டக் கலை துணை இயக்குனர் முருகன் கூறியதாவது:-

**<u>பட்டுப்போன மரங்கள்</u>**

மா சாகுபடி மற்றும் கொட்டை முந்திரி சாகுபடி யில் காய்ப்பு திறன் முடிந்து போன மரங்களால் சராசரி மகசூல் பாதிக்கப்படுகிறது. மா மரங்களை பொறுத்தவரை ஒரு எக்டேருக்கு சுமார் 100 மரங்கள் இருக்க வேண்டும். ஆனால் இடையில் சில மரங்கள் காய்ப்பு திறன் அற்ற தாகவும், சில மரங்கள் பட்டுப் போனதாகவும் இருக்கும். இதனால் எதிர்பார்க்கும் அளவிற்கு விளைச்சல் கிடைப் பது இல்லை.

பட்டுப்போன, காய்ப்புத் திறன் அற்ற மரங்களை அகற்றி விட்டு புதிய மரக்கன்றுகள் நடுவதற்கு தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது. கொட்டை முந்திரி, மா மரங்களை அகற்றி புதிய மரக்கன்றுகள் நட இந்த திட்டத்தின் மூலம் வாய்ப்பளிக்கப்படுகிறது

**ரூ.15 ஆயிரம் மானியம்**

இந்த திட்டத்தில் ஒரு எக்டேருக்கு ரூ.15 ஆயிரம் மதிப்பிலான செடிகள் மற்றும் இடு பொருட்கள் வழங்கப் படும். இதன் மூலம் உற்பத்தியை பெருக்கி அதிக மகசூல் பெறலாம். எனவே இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவல கத்தில் சிட்டா, அடங்கல் மற்றும் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

இவ்வாறு தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் தெரிவித்தார்.

**தேனி மாவட்டத்தில் 1,655 டன் உரம் இருப்பு வேளாண்மை அதிகாரி தகவல்**



தேனி,

தேனி மாவட்டத்தில் தட்டுப்பாடு இல்லாமல் உரம் வினியோகம் செய்வ தற்கு 1,655 டன் உரம் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது.

**120 லட்சம் மெட்ரிக்டன்**

இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணை யம் மற்றும் மதுரை, தேனி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் ஆகியவை சார்பில் தேனி மாவட்ட கூட்டுறவு உர விற் பனையாளர்கள் கருத்தரங்கு தேனியில் நடந்தது. இந்த கருத்தரங்கில் கூட்டுறவு சங்கங் களின் இணைப்பதிவாளர் வெள்ளியங்கிரி, வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம், இப்கோ கோவை மண்டல மேலாளர் அந்தோணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தேனி வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் ஜெயம் பாண்டியன் கலந்து கொண்டு உரம் இருப்பு, விற்பனை நடை முறை குறித்து பேசி னார்.

அவர் பேசும் போது கூறிய தாவது:-

தமிழ்நாடு முழுவதும் இந்த ஆண்டுக்கு மொத்தம் 120 லட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. போதிய மழை, தட்டுப்பாடு இல்லாத உரம் வினியோகம், பயிர் பராமரிப்பு இருந்தால் இந்த இலக்கை எளிதில் எட்டி விடலாம்.

**1,655 டன் உரம்**

தேனி மாவட்டத்தில் தட்டுப்பாடு இல்லாமல் உரம் வினியோகம் செய்ய வேண்டும் என்பதற்காக 1,655 டன் உரம் இருப்பு வைக்கப்பட்டு உள் ளது. மேலும் ஆயிரம் டன் உரம் கேட்டு பரிந்துரை செய் யப்பட்டு, விரைவில் கொண்டு வரப்பட உள்ளது. உரம் விற் பனை மையங்கள் தங்களது உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். உரிய காலத்தில் புதுப்பிக்க தவறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

உரம் மூடையில் குறிப்பிட் டுள்ள விலைக்கு அதிகமாக விற்பனை செய்யக் கூடாது. விற்பனை செய்யும் உரத்திற்கு விவசாயிகளுக்கு கட்டாயம் ரசீது கொடுக்க வேண்டும். டி.ஏ.பி. உரம் இறக்குமதி செய் யும் அன்னியச் செலவாணியின் மதிப்பு அதிகரிக்கிறது. இதனை குறைக்கும் வகையில் விவசாயி கள் டி.ஏ.பி. உரம் பயன் பாட்டை 5 சதவீதம் குறைத்துக் கொள்ள வேண் டும். அதனை ஈடுகட்டும் வகை யில்சூப்பர் பாஸ்பேட் உரத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

இவ்வாறு உதவி இயக்குனர் ஜெயம்பாண்டியன் கூறினார்.

**மயிலம் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை தீவிரம்**



மயிலம்,

மயிலம் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது.

சின்ன வெங்காயம் அறுவடை

மயிலம் பகுதியில் உள்ள விவசாயிகள் தங்களது நிலத்தில் கடந்த 3 மாதங் களுக்கு முன்பு சின்ன வெங் காயம் (சாம்பார் வெங்காயம்) சாகுபடி செய்திருந்தனர். தற்போது வெங்காய பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளன. இந்த நிலையில் மயிலம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்தால் வெங்காயம் அழுகி விடுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர். மேலும் சில விவசாயிகள் தாங்கள் பயிர் செய்துள்ள வெங்காயத்தை அறுவடை செய்ய தொடங்கி யுள்ளனர். அப்படி அறுவடை செய்துள்ள வெங்காயத்தை தங்களது வீடுகளில்காய வைத்து பின்னர் வியாபாரி களுக்கு கொடுக்கின்றனர்.

மயிலம் பகுதியில் வெங் காயம் அறுவடை தீவிரமாக நடந்து வருவதால், வியா பாரிகள் குறைந்த விலைக்கு சின்ன வெங்காயத்தை கொள்முதல் செய்வதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

விலை குறைவு

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கடந்த வாரத்தில் 80 கிலோ கொண்ட ஒரு மூட்டை ரூ.4 ஆயிரத்திற்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். தற்போது தொடர்ந்து மழை பெய்வ தாலும், மயிலம் பகுதி முழுவதும் வெங்காயம் அறுவடை

நடந்து வருவ தாலும் சின்னவெங்காயத்தின் விலையை வியாபாரிகள் குறைத்துள்ளனர். தற்போது 80 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு ரூ.3 ஆயிரம் என விலை நிர்ணயம் செய் கின்றனர். நாங்களும் வேறு வழியின்றி, அந்த விலைக்கு சின்னவெங் காயத்தை கொடுக்கிறோம். திண்டிவனம், சென்னை காய்கறி மார்க் கெட்டில் ஒரு கிலோ வெங் காயம் ரூ.60 முதல் ரூ.90 வரை விற்பனை செய்யப் படுகிறது. ஆனால் எங்களிடம் இருந்த வியாபாரிகள் ரூ.37-க்கு சின்னவெங் காயத்தை வாங்கி செல்கின்ற னர்.

நடவடிக்கை

வரும் காலங்களில் வெங்காயத்தை அரசே நேரடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**தமிழ்நாட்டில் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**



பெரம்பலூர்,

தமிழ்நாட்டில் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கவேண்டும் என்று பெரம்பலூரில் நடந்த தமிழக விவசாயிகள் சங்கம் செயற்குழுகூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

<u>**செயற்குழு கூட்டம்**</u>

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட தமிழக விவசாயிகள் சங்க செயற் குழுகூட்டம் மாநில செயலா ளர் ஆர்.ராஜா சிதம்பரம் தலைமையில் நடந்தது. அரியலூர் மாவட்டத்தலைவர் என்.பி. அன்பழகன், முன்னிலை வகித்தார்.

இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

<u>**நிவாரண உதவி**</u>

விவசாயிகள் போராட்டத் தின்போது உயிர்தியாகம் செய்த குடும்பங்களுக்கு தமிழகஅரசு நிவாரண உதவியும், வையம்பாளை யத்தில் உழவர் தலைவர் நாராயணசாமி நாயுடுவிற்கு நினைவுமண்டபம் அமைத்து தருவதாக முதல்-அமைச்சர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

தேசிய வேளாண்மை பயிர்க் காப்பீடு திட்டம், வானிலை பயிர்காப்பீடு திட்டத்தை தனிநபர் பயன் அடையும் வகையில் மத்திய அரசு மாற்றிஅமைக்க வேண்டும்.

தமிழக அரசு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் பயிர்க்கடன் பெறும் விவசாயி களிடம் கட்டாயமாக தவணைதொகை பிடித்தம் செய்யப்படுவதை கைவிட வேண்டும்.

<u>**கரும்புக்கு கூடுதல் விலை**</u>

சர்க்கரை ஆலைகளுக்கு 2004-2005-ம் ஆண்டு முதல் 2008-2009-ம் ஆண்டு வரை கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு விலையை(5ஏ) சர்க்கரை ஆலைகள் வழங்க உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்ததை செயல்படுத்திட தமிழக அரசை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

2013-14 ஆண்டு கரும்பு அறவை பருவத்திற்கு மத்திய அரசு எப்.ஆர்.பி. நியாயமான விலை டன்னுக்கு ரூ.2,100 என்று அறிவித்ததை ரூ.400 ஆக உயர்த்தி டன்னுக்கு ரூ.2,500 ஆக வழங்கிட முத்தரப்பு கூட்டத்தை கூட்டி கூடுதல் கரும்பு விலை உறுதியாக அறிவிக்கு மாறு. மத்திய, மாநில அரசுகளை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

<u>**பால் கொள்முதல்விலை**</u>

2 ஆண்டுகளாக பால் கொள்முதல் விலையை உயர்த்தவில்லை. தீவன விலை உயர்வு, பாலின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதை கருத்தில் கொண்டு பசும்பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.5-ம், எருமை பால் விலையை ரூ.7-ம் உயர்த்தி கொள்முதல் செய்ய தமிழக அரசை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட 31 மாவட்ட விவசாயிகளின் பயிர்க்கடனை தள்ளுபடி செய்திட மத்திய, மாநில அரசுகளை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது,

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் அரியலூர் மாவட்ட செயலாளர் வி.விஸ்வநாதன் பெரம்பலூர் மாவட்ட பொருளாளர் ஏ.மணி, அரிய லூ£ ¢மாவட்ட இளைஞர் அணி செயலாளர் கே.செல்ல துரை, வட்டார பொறுப் பாளர்கள் துரைசாமிநாயுடு, ஆர்.சுந்தரராஜன், எஸ்.கே. செல்லகருப்பு, என்.கே.பி. ராஜேந்திரன், படைகாத்து, எம்.எஸ். ராஜேந்திரன், பெரிய சாமி, வி.விவேகானந்தன், பக்கிரிசாமி, பிச்சைப்பிள்ளை, ஜெயப்பிரகாஷ், கே.அன்பழ கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கொடைக்கானலில் 2.85 மி.மீட்டர் மழை**



திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை கொடைக்கானல் பகுதியில் மட்டுமே மழை பெய்திருக்கிறது.

அதன்படி கொடைக்கானல் அப்சர்வேட்டரியில் 2.10 மில்லிமீட்டர் மழையும், கொடைக்கானல் போட்கிளப்பில் 0.75 மி.மீட்டர் மழையும் பதிவாகி இருக்கிறது. திண்டுக்கல், நத்தம், நிலக்கோட்டை, பழனி, வேடசந்தூர், சத்திரப்பட்டி, காமாட்சிபுரம் உள்ளிட்ட இடங்களில் மழை எதுவும் பெய்யாமல் வறண்ட வானிலையே நிலவியது.

**நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி முகாம்**



நீடாமங்கலம்,

நீடாமங்கலத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமை விரிவக்கத்துறை இணை பேராசிரியர் தாமோதரன் தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:– காளான் வளர்ப்பு ஒரு லாபகரமான தொழில் ஆகும். காளானை பக்குவப்படுத்தி பல்வேறு வகையான உணவு பொருட்களை தயாரிக்கலாம். காளான் நம் உடலுக்கு சக்தி, புரதம், வைட்டமின்கள், தாது பொருட்களை அளிக்கிறது. காளானின் மருத்துவ பண்புகள் மருந்து பொருட்களை தயாரிப்பதற்கு உதவுகிறது. இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் திட்ட உதவியாளர் ரேகா, வேளுக்குடி காளான் பண்ணை உரிமையாளர் இளங்கோ மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதில் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு காளான் வளர்ப்பது குறித்து பயிற்சி பெற்றனர். பயிற்சி ஏற்பாடுகளை அறிவியல் நிலைய பண்ணை மேலாளர் நக்கீரன் செய்து இருந்தார்.

**திருவாரூர் மாவட்டத்தில் தொடரும் பருவமழையால் சம்பா சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி**



திருவாரூர்,

திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் பருவமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>வடகிழக்கு பருவமழை</u>

ஆண்டுதோறும் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலம் வடகிழக்குப் பருவமழை காலமாகும். தமிழகத்துக்கு அதிக மழை தரும் பருவகாலமாக வடகிழக்குப் பருவ மழை காலம் கருதப்படுகிறது. இந்த ஆண்டுக்கான வடகிழக்குப்பருவ மழை காலம் அக்டோபர் 22–ந் தேதி தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. அதன்படி கடந்த 22–ந் தேதி(செவ்வாய்க்கிழமை) தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது.

அதேநேரத்தில் வங்க கடலில் இலங்கைக்கு அருகே காற்றழுத்த தாழ்வு நிலை மையம் கொண்டதால் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலை நகர்ந்து மத்திய மேற்கு மற்றும் தென்மேற்கு வங்ககடல் பகுதியில் மையம் கொண்டதால், தமிழகத்தின் வடக்கு மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை மையம் இன்று அறிவித்தது.

<u>4 நாட்களாக மழை</u>

காற்றழுத்த தாழ்வு நிலையுடன், வடகிழக்குப்பருவ மழை காலமும் தொடங்கியதையொட்டி திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது. கடந்த திங்கட்கிழமை இரவு முழுவதும் மழை பெய்தது. நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இரவும் மழை பெய்தது. இந்த மழை திருவாரூர் மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் பரவலாக பெய்தது.

திருவாரூரில் 2 மணி நேரத்துக்கும் மேலாக இந்த மழை நீடித்தது. மழை காரணமாக திருவாரூரில் பழைய பஸ் நிலையம், ரெயில்வே கீழ்ப்பாலம் உள்ளிட்ட இடங்களில் மழை தண்ணீர் குளம்போல் தேங்கி நின்றது. இதனால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர். இதேபோல் மாவட்டத்தின் மற்ற பகுதிகளான குடவாசல், நீடாமங்கலம், மன்னார்குடி உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது.

விவசாயிகள் மகிழ்ச்சி

காவிரி டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதியில் உள்ள திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை நடப்பு சம்பா சாகுபடிக்கு உகந்ததாக கருதப்படுகிறது. மேட்டூரில் திறந்து விடப்பட்ட காவிரி தண்ணீர் கடைமடை பகுதி பாசன வாய்க்கால்களுக்கு சென்று சேரவில்லை என்று கூறி விவசாயிகள் சாலைமறியலில் ஈடுபட்டு வந்த நிலையில், திருவாரூர் மாவட்டத்தில் பெய்து வரும் மழை கடைமடை பகுதி பாசன வாய்க்கால்களில் நீர் இருப்பை அதிகரிக்க செய்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த மழை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் திருவாரூரில் அதிகபட்சமாக 12 மில்லி மீட்டர் மழை பதிவானது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டர் அளவுகளில்) வருமாறு:–

வலங்கைமான்–11,

நன்னிலம்–10,

குடவாசல்–9,

மன்னார்குடி–4,

முத்துப்பேட்டை–1.

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மொத்த மழை அளவு 48 மில்லி மீட்டர் ஆகும். சராசரியாக மாவட்டத்தில் 5 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

**அக்டோபர் 17–ந் தேதி நிலவரம் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு 1.95 கோடி ஹெக்டேர்**



கொல்கத்தா,

நடப்பு கரீப் பருவத்தில் (ஜுன்–அக்டோபர்) இம்மாதம் 17–ந் தேதி நிலவரப்படி எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு 1.95 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே நாளில் 1.78 கோடி ஹெக்டேராக இருந்தது. ஆக, நடப்பு பருவத்தில் சாகுபடி பரப்பளவு 17 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது.

<u>ஒரு ஹெக்டேர் மகசூல்</u>

நடப்பு பருவத்தில் எண்ணெய் வித்துகள் உற்பத்தி 1.69 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு கரீப் பருவத்தில் 1.52 கோடி டன்னாக இருந்தது. அதேபோல் ஒரு ஹெக்டேர் வாயிலான

எண்ணெய் வித்துகள் மகசூல் 867 கிலோவாக அதிகரிக்கும். இது சென்ற ஆண்டின் 855 கிலோவாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் சோயாபீன் உற்பத்தி 1.13 கோடி டன்னிலிருந்து 1.07 கோடி டன்னாக குறைந்தது. அறுவடை சமயத்தில் கனமழை காரணமாக சோயாபீன் அளவு மற்றும் தரம் கடுமையாக குறைந்தது. நடப்பு ஆண்டில் சோயாபீன் உற்பத்தி கணிசமாக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

நடப்பு கரீப் பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.30 கோடி பொதிகளில் இருந்து 3.60 கோடிகளாகவும், பருத்தி விதை உற்பத்தி 1.02 கோடி டன்னிலிருந்து 1.12 கோடி டன்னாகவும் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பருத்தி விதை எண்ணெய் உற்பத்தி 11.13 லட்சம் டன்னிலிருந்து 12.20 லட்சம் டன்னாக உயர வாய்ப்புள்ளது.

இதே காலத்தில் தவிட்டு எண்ணெய் உற்பத்தி 9 லட்சம் டன்னிலிருந்து 9.30 லட்சம் டன்னாகவும், உள்நாட்டில் பாமாயில் உற்பத்தி 80,000 டன்னிலிருந்து 1.10 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மக்காச்சோள எண்ணெய் உற்பத்தி 50,000 டன்னாக அதிகரிக்கும் என தெரிகிறது.

<u>தாவர எண்ணெய்</u>

நடப்பு கரீப் பருவத்தில் உற்பத்தி செய்யப்படும் தாவர எண்ணெயும், கையிருப்பில் உள்ள எண்ணெயும் சேர்த்து மொத்தம் 58.03 லட்சம் டன் தாவர எண்ணெய் கிடைக்கும். இது சென்ற ஆண்டில் 52.65 லட்சம் டன்னாக இருந்தது. ஆக நடப்பு ஆண்டில் 5.38 லட்சம் டன் தாவர எண்ணெய் கூடுதலாக கிடைக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது